விலை: 60.00
பக்கங்கள் - 24 + II
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 26
ஒலி 150 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை (18.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# மே 18 தமிழினப் படுகொலை நினைவேந்தல் இன்று

## அஞ்சலி நிகழ்வுக்குத் தயாரானது முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்



(முல்லைத்தீவு)

**மே 18** தமிழினப்படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலி நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. (23ஆம் பக்கம் பார்க்க)

### தூக்குப் போடப் போவதாக
## இளைஞனை அச்சுறுத்த முயன்ற யுவதி மரணம்

(கரணவாய்)

தூக்குப் போடப் போவதாக இளைஞனை அச்சுறுத்த

23ஆம் பக்கம் பார்க்க

- வியாசர் பதில்கள்
- ஆச்சி அறிவுரை
- கவிதைக் கலசத்துடன்

இன்னும் பல அம்சங்களுடன்
உங்கள் சங்குநாதம் உள்ளே

### யுத்தத்தில் மனைவி, குழந்தையை
## பறிகொடுத்த தந்தை ஒருவரின் கதறல்...!

(முல்லைத்தீவு)



மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி முல்லைத்தீவு நோக்கி நேற்று

23ஆம் பக்கம் பார்க்க

## போர்க் குற்றவாளிகளுக்கு எதிரான பிரிட்டனின் தடைகள் குறித்து திருப்தி
### பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர்



(லண்டன்)

இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களிற்கு உள்ளான தனிநபர்களிற்கு எதிராகப் பிரிட்டன் சமீபத்தில் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதித்துள்ளமை குறித்து திருப்தியடைகின்றேன் என பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்

23ஆம் பக்கம் பார்க்க

## மழை காரணமாக செம்மணி அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பெய்த மழை காரணமாக செம்மணி சிந்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

செம்மணி - சிந்துப்பாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது மனித எச்சங்கள்பல மீட்கப்பட்டிருந்தன.

அந்த மனித எச்சங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்

23ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் 23ஆம் திகதிவரை கனமழை தொடர வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் கனமான மழை எதிர்வரும் 23.05.2025 வரை தொடரும் வாய்ப்புள்ளது. இம் மழையின்போது இடிமின்னல் நிகழ்வுகளும் இடம்பெறும் என்பதனால் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற் துறைப் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அண்மித்த ஆண்டுகளில் மே மாதம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அதிக மழை தரும் மாதங்களில் ஒன்றாக மாறியுள்ளது. குறிப்பாக நவம்

23ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் கஞ்சி அருந்திய சுற்றுலாப் பயணிகள்



23ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தடை ஏற்படுத்திய சம்பூர் பொலிஸார்
### பதாகையையும் கழற்றிச் சென்றனர்



(மூதூர்)

சம்பூரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு பொலிஸார் தடை ஏற்படுத்தியதோடு அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகையையும் கழற்றிச் சென்றனர்.

சம்பூர் கடற்கரைச் சேனைப் பகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூதூர் கிளை ஏற்பாட்டில் நேற்று மாலை முள்ளி

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீடு வாடகைக்கு

இல.120, 3 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணத்திலுள்ள மாடி வீடு(மேல், கீழ்)
வாடகைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம் மாலை 4.30 மணிக்குப் பின்னர்
தொடர்பு : 077 628 4415

## யாழ் நகரில் வேலைவாய்ப்பு

- மணவறை அலங்கரிப்பாளர்
- Decoration helper
- Designer
- Store Keeper

077 775 0318

(4317)

## குங்குமம் திருமண சேவை (கனடா)

31 வயதுடைய லண்டன் மணமகனுக்கு ஐரோப்பா/லண்டனில் மணமகள் தேவை.
35 வயதுடைய கனடா மணமகனுக்கு கனடாவில் (PR/Visiting Visa/Student Visa) மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு :
+1 437 223 4688

(1144)

## தேவை

திருமுறிகண்டிக்கு அருகில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையல், சமையல் உதவியாளர், முகாமையாளர் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு :
077 993 0280

(1141)

## கார் சாரதி தேவை

ஓய்வு நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு குறுகிய ஓட்டங்களுக்காக சாரதி தேவைப்படுகின்றார். 50 வயதுக்கு மேற்பட்டவராகவும் நல்லூருக்கு அண்மையாக வசிப்பவராகவும் இருப்பது நன்று. அண்மையில் ஓய்வு பெற்றவர்களும் விரும்பத்தக்கது.
பணி நேரம் : காலை 9 மணி முதல் 12 மணி வரை
மாலை 5 மணி முதல் 7 மணி வரை
நேரில் வருகை தரவும்
அக்ஷதை உணவகம், ஆரியகுளச் சந்தி.

(4307)

## PickMe (Jaffna to Vavuniya)

உங்களிடம் வைத்திருக்கும்
முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், கார், வேன், லாரி
இருந்தால் நீங்கள் எங்களுடன் இலவசமாக இணையலாம். மாதம் Rs.150,000க்கும் மேல் வருமானம் நிச்சயம்.
0774737737 | 0769447737

(C-2996)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா சிவபாதம்
(இளைப்பாறிய பிரதி அதிபர்,
ஆசிரியர் கலாசாலை, பலாலி)

தோற்றம் 20.05.1944
மறைவு 18.05.2020

ஆண்டுகள் மறைந்தாலும் அப்பா!
உங்கள் நினைவுகள் மறைவதில்லை
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அப்பா என்ற உறவுக்கு நிகரில்லை

வரணி,
யாழ்ப்பாணம்.

நீங்காத
நினைவுகளுடன் வாடும்
குடும்பத்தினர்

(4321)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் பருத்தித்துறை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திரு.க.சிவகணேஸ் அவர்களின் தாயார்

அமரர் கந்தசாமி
சின்னத்தங்கம்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1143)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வடமாகாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
08 - 07 - 1948



இறப்பு
17 - 05 - 2025

### வேலுப்பிள்ளை இராசலிங்கம்

**(வித்தியா ஸ்ரோர்ஸ்)**

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கண்டி (வத்தேகம) அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசலிங்கம் அவர்கள் நேற்று (17.05.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் கீதாஞ்சன் (பிரான்ஸ்), இராகவன் (லண்டன்), திலீபன் (கனடா), கார்த்திகா, வித்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் லோசினி (பிரான்ஸ்), டிசாந்தினி (லண்டன்), சுதர்ஷிகா (கனடா), கண்ணதாசன், றோய் நிதர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான லட்சுமியம்மா, நல்லைநாதன் மற்றும் இராசரத்தினம், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனனியா, ஆதிரா, இனியன், இனியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்
0717396527, 0771749208

(C-2995)

## (22) விற்பனைக்கு (22)

- யாழ்.வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்
- யாழ்.வைத்தியசாலை வீதியில் மரக்கறிச் சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட கடைத்தொகுதியும்
- யாழ்.வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 06 பரப்புக் காணியும்
- யாழ்.பழைய post office வீதியில் சம்பத் வங்கிக்கு முன்பாக 200 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட மாடிக்கட்டடமும்
- யாழ்.ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கு அண்மையில் 50 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 4 மாடிக் கட்டடமும்
- யாழ்.கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 12 பரப்புக் காணியும் 5 பரப்புக் காணியும்
- யாழ்.Brown வீதியில் Brown வீதி முகப்புடன் 4 பரப்புக் காணியும்
- யாழ்.சிவகுருநாதர் வீதியில் 4 பரப்புக் காணியும்
- யாழ்.வைத்தியசாலை வீதியில் லேடன் கம்பனிக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- அரியாலை கிழக்கு பூம்புகாரில் 10 ஏக்கர் காணியும்
- யாழ்.விக்டோரியா வீதியில் 12, 16 பரப்புக் காணியும்
- யாழ்.பலாலி வீதியில் S.V.M எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 42 அடி அகலமும் 130 அடி நீளமும் கொண்ட காணியும்
- யாழ்.மின்சாரநிலைய வீதியில் 1½ பரப்பு. 2 பரப்பு. 3 பரப்பு. 6 பரப்புக் காணியும்
- யாழ்.மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணியும்
- யாழ்.சுதுமலை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும்
- யாழ்.ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 4 கடை அமைந்த கட்டடத் தொகுதியும்
- யாழ்.கஸ்தூரியார் வீதியில் கபிலா காலணியகத்திற்கும் வின்சன் சந்திக்கும் அண்மையில் 4 கடைகளும்
- யாழ்.K.K.S வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும் கட்டடமும்
- நிலாவரையில் 80 பரப்புக் காணியும்
- யாழ்.நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
- யாழ்.நல்லூர் கோயில் வீதிக்கு அண்மையில் 1 ½ பரப்பில் அமைந்த மாடி வீடும்
- மன்னார் வைத்தியசாலை வீதியில் 4 பரப்புக் காணியும் 1 ½ பரப்பில் அமைந்த மாடி வீடும்
- யாழ். K.K.S வீதியில் K.K.S வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
- யாழ்.Brown வீதியில் 3 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறிச் சந்தைக்கு முன்பாக 15 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும் உடன் விற்பனைக்கு உண்டு.

(C-2993)

இல.185,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இல.183,
காலி வீதி,
வெள்ளவத்தை.

தொடர்புகளுக்கு:
கனகசபை தர்மகுலசிங்கம்
077 723 2535

# மீண்டும் மின்கட்டணம் உயருமா?



**(கொழும்பு)**

**செலவுகளை பூர்த்தி செய்வதற்காக மின்கட்டணத்தை 18.3 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது**

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஜூன் முதல் வாரத்தில் இவ்விடயம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான யோசனையை இலங்கை மின்சார சபை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது. (நி-8)

# தொழிற்கல்விக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன-கல்வி அமைச்சு

(கொழும்பு)

உயர்தர தொழிற்கல்விப் பிரிவின் கீழ் தரம் 12 இல் சேர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த அறிவிப்பானது, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு முதல் 608 பாடசாலைகளில் தொழிற்கல்விப் பிரிவு செயற்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையத் தவறியிருந்தாலும் இந்தப் பிரிவுக்கு மாணவர்களைச் சேர்க்கும்போது அது இங்கு கருத்தில் கொள்ளப்படாது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சேர்க்கை கோரப்படும் பாடசாலையின் அதிபரிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி)

# தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் போக்குவரத்து அமைச்சு அதிருப்தி

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக 909 பேரை சேவையில் இணைத்துக்கொள்ள இந்த வருட ஆரம்பத்தில் அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளாக 106 பேரை சேவையில் இணைக்க அனுமதி பெறப்பட்டதாகவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் கோரிக்கைகளுக்கான தீர்வுகள் அமைச்சு மட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவை நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் திணைக்களத்தின் அசமந்தநிலை குறித்து கலந்துரையாடி தீர்வு காணாது பொதுமக்களை சிரமத்துக்கு உள்ளாக்கி தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பில் போக்குவரத்து அமைச்சு அதிருப்தியை வெளியிட்டுள்ளது. (நி-8)

# நீதியமைச்சின் சொகுசு வாகனங்களை ஏலத்துக்கு விட முடிவு

(கொழும்பு)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கு உரித்தான எரிபொருள் செயற்பாடு குறைந்த மற்றும் பராமரிப்பு செலவு கூடிய சொகுசு வாகனங்களுக்காக விலை மனு கோரி ஏலத்தில் விடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செலவுகளை குறைத்தல் மற்றும் நிதிப் பொறுப்புணர்வை ஊக்குவித்தல் என்ற அரசாங்கத்தின் கொள்கை தீர்மானத்தின் பிரகாரம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கு உரித்தான 10 சொகுசு வாகனங்களுக்கு விலை மனு கோரி ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள வாகனங்களை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று பார்வையிட்டுள்ளார். இந்த வாகனங்களில் பி.எம்.டபிள்யூ ரக 2 வாகனங்கள், நிசான் எக்ஸ், ட்ரைல் ரக ஒரு வாகனம்.

லேண்ட் ரோவர் டிபெண்டர் ரக 2 வானங்கள், டோக்கியோ லேண்ட் க்ருயிசர் ரக 3 வாகனங்கள், மிட்சுபிஷி மொன்டேரோ ரக ஒரு வாகனம் மற்றும் மிட்சுபிஷி வகையில் பெஜிரோ வாகனம் ஒன்றும் விற்பனை செய்வதற்கு திட்டமிட்டு விலை மனு கோரி இருப்பதாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


# நடன நாட்டிய அரங்கேற்ற நன்றி நவிலல்



ஆத்மா கலைக்கூடத்தின் ஆசிரியர்களுடன் இணைந்து "கலாகீர்த்தி" திருமதி.சாந்தினி சிவனேசன் அவர்கள் செல்வி அகரயாழினிக்கு சான்றிதழ் வழங்கிய பொழுது...



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவிகளுடன் அகரயாழினி

**அன்புடன் குடும்பத்தினர்**
**உதயகுமார் வத்சலா.த மற்றும் மகன்**
**விதுசன் த.உதயகுமார்.**
**தொடர்புகளுக்கு புலன வழி: +4591927896**

**நெஞ்சார்ந்த நன்றிகள்.**

15.03.2025 அன்று யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு அரங்கில், மிகச் சிறப்பாக நடந்தேறிய எமது மகள் அகரயாழியின் செவ்வியல் நடன நாட்டிய அரங்கேற்றத்தினை, மிகச் சிறப்பாகவும் நேர்த்தியுடனும், பண்பாட்டுடனும் நடாத்தி முடிப்பதற்கு, சகலவிதத்திலும் உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

'ஆத்ம கலைக்கூடம்' (இந்தியா) ஆசிரியர்களான 'நாட்டிய கலா விபஞ்சி' திரு. பா. மதுசூதனன் (இந்தியா) ஸ்ரீமதி. ஆ. வைஜெயந்தி மற்றும் ஸ்ரீமதி. ம.ர. லாவண்யா ஆகியோருக்கு எங்கள் ஆத்மார்த்த நன்றிகள்.

எங்களின் அழைப்பை ஏற்று இந்நிகழ்வை மேலும் சிறப்பித்த கௌரவ, சிறப்பு விருந்தினர்களான: 'கலாகீர்த்தி' திருமதி. சாந்தினி சிவநேசன், பேராசிரியர் திருமதி. பாரதி கெனடி, 'இசைவாணர்' திரு. கோபாலகிருஷ்ணன் சக்கரபாணி, 'இசைச்சுடர்' திரு. மகவே. முல்லைவேந்தன், திரு. ரட்ணராஜா கிருஷ்ணகுமார், கலாநிதி. திருமதி. சத்தியப்பிரியா கஜேந்திரன், கலாநிதி. திருமதி. பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன், 'கலைச்சுடர்' திரு. பாலச்சந்திரன் நாகேந்திரன், உங்கள் அனைவரது வருகையால் பெருமையும் மகிழ்வும் அடைகின்றோம்.

குறிப்பாக சகல ஆலோசனைகள் வழங்கிய பிரம்மஸ்ரீ. தாவோ ஐயா (மனமே குரு பயிற்சி நடுவம், இந்தியா) அவர்களுக்கும், எமது கனிவான நன்றிகள். அத்துடன் அன்று வருகை தந்திருந்த ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் எமது கனிவான நன்றிகள்!

முக ஒப்பனை செய்த திருமதி. சாமர்த்தியா (இந்தியா) அவர்களுக்கும், அணிசேர் கலைஞர்கள், மேளதாள கலைஞர்களுக்கும், அரங்க அமைப்பாளர் திரு. ஞானகுருபரன் ஐயா அவர்களுக்கும், நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய திரு. விஜயகுமார் ஜெயச்சந்திரன், நிகழ்வைத் தொகுத்து வழங்கிய ஆசிரியை ஆ. வையெந்தி (இந்தியா) அவர்களுக்கும், அழகிய வண்ணமலர் மாலைகளை வழங்கியவர்களுக்கும், அனைத்து பரிந்துரைகளையும் கவனித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றிகள். குறிப்பாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவிகளுக்கு, என் மனமார்ந்த உவகை கலந்த நன்றிகள்.அத்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தை வழங்கிய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. சத்தியபிரியாவின் மாணவ மாணவிகளுக்கும் நன்றிகள். எமது மருமக்களான நிலவன் (நிரோ), கிரிசாந் (கிரி) அவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் எமது நன்றிகள். மற்றும் தம்பி சங்கர் (இந்தியா) அவர்களுக்கு எமது நன்றிகள். சிற்றுண்டி மற்றும் இரவு உணவு ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். நிகழ்வின் ஒலி, ஒளி, ஒளிப்பதிவு, நிழற்படம் போன்றவற்றைத் திறன்படச் செய்த தொழில்நுட்பக் குழுவிற்கு, எமது இதயபூர்வமான நன்றிகள்.

உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். என் எண்ணக் கருவோட்டத்தை அழகாக ஒருங்கமைந்த கலைக்களகத்திற்கும்,வடிவமைத்த வடிவமைப்பாளர் தம்பி பிரவி. துயிலவனுக்கும் (இந்தியா) கோடான கோடி நன்றிகள்.

இந்த அரங்கேற்றம் எங்கள் மகளின் கலைப்பயணத்தில் முதல் படியாக இருக்கும். இவ்வளவு சிறப்பாக நடந்த இந் நிகழ்ச்சிக்காக ஒவ்வொருவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும். உங்கள் அனைவரது அன்பும் ஆதரவும் எங்கள் மகளின் கலைப் பயணத்தை மேலும் அழகாக்கும்.

**நன்றி, நன்றி, நன்றி!**



(சி-2991)

# துளித் துளியாய் கொட்டும் மழைத்துளியாய்...

**இரத்தானது போட்டி; உறுதியானது பெங்களூவின் பிளே ஓப் வாய்ப்பு**
**பரிதாபமாக வெளியேறியது நடப்புச் சம்பியன் கொல்கத்தா**



பெங்களூரு - கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான இந்தியன் பிரீமியர் லீக் போட்டி மழையால் இரத்தானது.

இந்தியாவில், பிரீமியர் லீக் 18வது சீசன் நடக்கிறது. போர் பதற்றம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட போட்டிகள் மீண்டும் தொடங்கின. பெங்களூரு, சின்னசாமி மைதானத்தில் நடக்க இருந்த லீக் போட்டியில் பெங்களூரு, "நடப்புச் சம்பியன்" கொல்கத்தா அணிகள் விளையாட இருந்தன.

ஆனால் கனமழையால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஆனது. தொடர்ந்து மழை பெய்ததால், போட்டியை இரத்துச் செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

பெங்களூரு அணி 17 புள்ளிகளுடன் "பிளே-ஓப்" வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டது.12 போட்டிகளில் 12 புள்ளி பெற்ற கொல்கத்தா அணி, "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்தது. (ம-7)






## ரசிகர்கள் கௌரவம்

சமீபத்தில் டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய நட்சத்திர வீரர் விராட் ஹோலி ஓய்வை அறிவித்தார். சொந்த மண்ணில் நடக்கும் டெஸ்டில் இனி இவரைப் பார்க்க முடியாது.

எனவே சின்னசாமி மைதானத்திற்கு வந்த இவரது ரசிகர்கள் சிலர், "விராட் 18" என்ற ஆங்கில வார்த்தை இடம்பெற்றிருந்த கோலியின் டெஸ்ட் ஜெர்சி அணிந்து வந்து கௌரவித்தனர்.

# ஐ.சி.சி உலக டெஸ்ட் போட்டி

## சம்பியன் அணிக்கு 107 கோடி ரூபா பரிசு

இங்கிலாந்தின் லோர்ட்ஸ் விளையாட்டரங்கில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று சம்பியனாகும் அணிக்கு வழங்கப்படவுள்ள பணப்பரிசு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி உறுதி செய்துள்ளது.

இதற்கு அமைய சம்பியனாகும் அணிக்கு இலங்கை நாணயப்படி 107 கோடியே 53 இலட்சம் ரூபா பணப்பரிசுகளும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 62 கோடியே 68 இலட்சம் ரூபா பணப்பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் நடப்பு உலக சம்பியன் அவுஸ்திரேலியாவும் முதல் தடவையாக தென் ஆபிரிக்காவும் பங்கு பற்றுகின்றன. இந்த இறுதிப் போட்டி லண்டன் லோர்ட்ஸ் விளையாட்டரங்கில் எதிர்வரும் ஜூன் 11 ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதிவரை நடைபெறவுள் ளது.

கடந்த இரண்டு ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் அத்தியாயங்களில் சம்பியன்களான நியூஸிலாந்தும் அவுஸ்திரேலியாவும் பெற்ற பணப்பரிசை விட இம்முறை பணப்பரிசு இரட்டிப்பு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தும், அவுஸ்திரேலியாவும் கடந்த இரண்டு அத்தியாயங்களில் சம்பியனானபோது 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களையே பணப்பரிசாகப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-3)

# தலை சுற்ற வைக்கும் ரொனால்டோவின் வருமானம்



உலக கால்பந்து ஜாம்பவான் மற்றும் போர்த்துக்கல் நாட்டின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகில் அதிக வருமானம் பெறும் விளையாட்டு வீரராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

பிரபல ஃபோர்ப்ஸ் பத்திரிகை சமீபத்தில் வெளியிட்ட 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் அதிக வருமானம் பெறும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடத்தைப் பிடித்துள்ளார். கடந்த ஆண்டில் ரொனால்டோ மொத்தம் 275 மில்லியன் டொலர்கள் சம்பாதித்ததாக ஃபோர்ப்ஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல மதிப்புமிக்க பிராண்டுகளுக்கான தனது விளம்பர ஒப்பந்தங்கள் மூலமாகவும், தனது சொந்த CR7 பிராண்டின் கீழ் ஹோட்டல்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஜிம்கள் போன்ற வணிகங்கள் மூலமாகவும் ரொனால்டோ தொடர்ந்து பணம் சம்பா தித்து வருகிறார்.

ஃபோர்ப்ஸ் பட்டியலில் ரொனால்டோவுக்கு அருகில் கூட யாரும் வரவில்லை. ரொனால்டோவுக்கு அடுத்த படியாக அமெரிக்க கூடைப்பந்து சூப்பர் ஸ்டார் லெப்ரான் ஜேமஸ் 133.8 மில்லியன் டொலர் வருமானத்துடன் 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இது ரொனால்ட்டோவின் வருவாயில் பாதிக்கும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-3)

# இன்றைய ஆட்டங்கள்




டெல்லி

நேரம்: இரவு 7.30

இடம்-அருண் ஜேட்லி விளையாட்டரங்கு




டைட்டன்ஸ்



## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு மிக விரைவாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்

**கனடா பிரஜாவுரிமை பெற்ற 2002ம் ஆண்டு பிறந்த உத்தரட்டாதி நட்சத்திரம் உடைய மணமகளுக்கு உடன் மணமகன் எதிர்பார்க்கப்படுகிறது.**

(4318)

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


# இன்றைய ஆட்டங்கள்




ராஜஸ்தான்

நேரம்: பிற்பகல் 3.30

இடம்- சவாய் மான்சிங் விளையாட்டரங்கு




பஞ்சாப்

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற வலய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் தென்மராட்சி-இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய தரம் மூன்று மாணவர் கலப்பு அணி முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (நி-3-30)




## விற்பனைக்கு

15KV ஜெனரேட்டர் உடன் விற்பனைக்கு உண்டு.

ASHOK LEYLAND

தொடர்பு:-

(சி-147)

077 731 1407



## சந்நிதி அக்கடமி

சிங்கள வகுப்புக்கள்
6-11 வரை
A/L தோற்றியவர்களுக்கும்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகாமை
சந்நிதி மனோ

077 767 7773


## ஒடிசாவில் 9 பேரை பலியெடுத்த மின்னல்

(டில்லி)

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் நேற்று முன் தினம் இடியுடன் கூடிய மழை பெய்த நிலையில், மின்னல் தாக்கியதில் 6 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

கோராபுட், கட்டாக், கோர்த்தா, நயாகட், ஜாஜ்பூர், பாலேசோர் மற்றும் கஞ்சம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை, மின்னலுடன் கூடிய ஆலங்கட்டி மழை மற்றும் மணிக்கு 60 முதல் 70 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

அதன்படி, நேற்று பல்வேறு இடங்களில் பெய்த மழையால் மின்னல் தாக்கியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

மேலும் காயமடைந்தவர்கள் பலர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (நி-8)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
16 - 01 - 1943



மறைவு
18 - 04 - 2025

கடந்த 18.04.2025 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்.

### சின்னத்தம்பி இராசேந்திரம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 18.05.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(4304)

அம்மன் கோவிலடி, வதிரி, கரவெட்டி. தகவல்–குடும்பத்தினர்.





சிவமயம்

## யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதித்தமிழ் மன்னன் 2ம் சங்கிலியனின் 406 ஆவது நினைவு நாள்

## அழைப்பிதழ்-2025

காலம்:
விசுவாவசு வருஷம் வைகாசி தேய்பிறை அட்டமி செவ்வாய்க்கிழமை (20.05.2025) காலை9.00 மணி

இடம்:
யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தி சங்கிலியன் சிலை

தலைமை
பேராசிரியர்.க.தேவராஜா
(ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

திருமுன்னிலை:
சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள்
(ஆதீன கர்த்தா ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலயம், மருதனார்மடம்)

வண.கலைமாமணி.மீகஹஜந்துக ஸ்ரீவிமலதேரர்
(நாகவிகாரை, யாழ்ப்பாணம்)

கலாநிதி.ஆறு.திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை.)

பிரதம விருந்தினர்:
கௌரவ.ஸ்ரீசாய்முரளி
(இந்தியத் துணைத் தூதுவர், துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:
திரு.சந்திரன் கிருஷ்ணேந்திரன்
(யாழ்.மாநகரசபை ஆணையாளர், நல்லூர்)

கலாநிதி.பொ.சந்திரசேகரன்
(தலைவர் சைவசித்தாந்தபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

டாக்டர்.திரு.த.குகதாசன்
(நிர்வாக அதிகாரி,யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

அருள்மொழி வாருதி. சைவப்புலவர்-க.கையிலைவாசன்
(மேலாய்வு உத்தியோகத்தர், தொல்லியல் திணைக்களம், யாழ்ப்பாணம்)

கலாநிதி. குருசுவாமி சுரேந்திரன்
(தேசிய அமைப்பாளர், ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி, யாழ்ப்பாணம்)

திரு.வே.கமலேஸ்வரன்
(ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்கள்:

கல்விக்காருண்யர், கொடைவள்ளல்
E.S.P நாகரத்தினம் (யா/தொழிலதிபர், யாழ்ப்பாணம்)

திரு.ந.திவாகர் (தொழிலதிபர், அண்ணா தொழிலகம், இணுவில்)

திரு.S.சண்முகானந்தன்
(தொழிலதிபர், ராஜா கிறீம் ஹவுஸ்,யாழ்ப்பாணம்)

கலாநிதி சி.மோகன்
(தமிழ் பௌத்த காங்கிரஸ் மற்றும் இந்து பௌத்த ஒற்றுமை அமைப்புக்கள். யாழ்ப்பாணம்)

திருமதி.கிருபாகரன் தனித்தா
(முதல்வர், கிருபாலேணர்ஸ், யாழ்ப்பாணம்)

திரு.செ.ஜெகபாலன்
(தலைவர், மக்கள் நலன்பேணும் அமைப்பு, கோண்டாவில்)

நன்றியுரை
செல்வி.ச.வளர்மதி (ஓய்வுநிலை ஆசிரியர்)

(சி-2958)

N.P.ஸ்ரீந்திரன்
செயலாளர்,தமிழ் மன்னன், சங்கிலியன் நினைவுக்குழு


# இராசிபலன்

18.05.2025
வைகாசி04 , ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி பின்னிரவு 3.03மணிவரை
உத்தராடம் பிற்பகல்4.14மணிவரை

சுபநேரம் 8.53-10.23 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53மணிவரை

சந்திராஷ்டமம் -
திருவாதிரை, புனர்பூசம்

வளவன்

**மேஷம்**
வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**
நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், வெளியூர்ப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்**
பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்லும் இடங்களில் சிந்தனை சிறப்படைவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.

**மகரம்**
அச்சுறுத்தலாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொட்ட காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**ரிஷபம்**
தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**
சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் போட்டிகள் மாறும், பெரியவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்**
நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கன்னி**
மன நிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**தனுசு**
எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்ல போட்டி திட்டங்கள் கைகூடும், பணவரவு அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

நியாயமான கோபத்தை வீணாகச் செலவழித்து விடாதே.

# 4 கிலோ 'குஷ்' உடன்
## காங்கேசன்துறையில் இந்தியர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைமுகத்தில் 4 கிலோ குஷ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் இந்தியாவில் இருந்து நாகபட்டினம் துறைமுகம் ஊடாக கப்பல் வழியாக போதைப் பொருளை எடுத்து வந்த வேளை சுங்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் போதைப் பொருள் பொலிஸ் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (நி)



குப்பிழான் தெற்கு கலைவாணி சனசமூக நிலைய திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டதைக் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தீவகம் தெற்கு, வேலணை மேற்கூர், பெரியபுலப் பதியுறை அருள்மிகு மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.40 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாட்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சி எதிர்வரும் மே மாதம் 21, 22, 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ளது. (3-8)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு நேற்று நவாலியில் அமைந்துள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு யாழ். நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அருகாமையில் நேற்று சனிக்கிழமை இரத்ததான முகாம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் நடமாடும் நூலக சேவை யா/ஊரெழு கணேச வித்தியாசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

# மரண அறிவித்தல்

பிறப்பு
1996
02
03



இறப்பு
2025
05
16

## திருமதி. நிசாந்தன் அஜித்தா

அரசடி கோப்பாய் மத்தி கோப்பாயினை பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.நிசாந்தன் அஜித்தா அவர்கள் 16.05.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் இரத்தினம் -யோகராணி தம்பதிகளின் அன்பு இளைய புதல்வியும், ராஜ்குமார்-லதா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், நிசாந்தனின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.05.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(4309)

தகவல்- குடும்பத்தினர்
077 198 7873



வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 493
18.05.2025


# முள்ளிவாய்க்கால்... தமிழின அழிப்பின் ஓர் அத்தியாயம்






அபிமன்யு

**“மே-18 தமிழினத்தின் கறைபடிந்த நாள்.”**

நந்திக் கடலின் வெள்ளை அலைகள் தமிழர் செங்குருதியினால் சிவந்து நின்ற நாள். குண்டு மழையால் தமிழினத்தின் உடல்கள் சல்லடையாக்கப்பட்ட நாள். முள்ளிவாய்க்கால் முற்றம் முழுவதுமாய் தமிழினத்தின் பிணங்கள் நிலைகுலைந்து கிடந்த நாள். ஈழத்தமிழினத்தின் இன்னல் அறியாது சர்வதேசம் மௌனித்திருந்த நாள்.

பதுங்கு குழிக்கு வெளியே தலைகாட்ட முடியாத நிலையிலும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் கஞ்சி காய்ச்சி சின்னஞ்சிறு பிள்ளைகள் பசியாற்றிய நாள். பயங்கரவாதம் அழிக்கப்படுவதாகக்கூறி ஒரு இன அழிப்பை அரங்கேற்றி பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என்று நெஞ்சில் ஈரமில்லாது ஆட்சியாளர்கள் அறிக்கைவிட்ட நாள்.

அது மே-18. போரின் உச்சம் தமிழினத்தின் உடல்களை குண்டுகள் சல்லடை போட்டுக் கொண்டிருந்தது. கந்தகப் புகையை சுவாசிக்க முடியாமல் மக்கள் அந்தரப்பட்ட கணப்பொழுதுகளை எண்ணிப் பார்க்க நெஞ்சம் நொந்து நூலாகி விடுகிறது.

தாகத்தில் தவித்த தன் பிள்ளைகளுக்கு தண்ணீர் எடுக்கச் சென்ற தந்தையின் மேல் செல் வீழ்ந்து வெடிக்க அவர் சிதறிப் போனதை தம் கண்முன் கண்ட கொடூரங்களை சொல்ல மொழியின்றி நெஞ்சில் புதைத்துவிட, அவை காலில் குத்திய நெருஞ்சி முள்ளாய் இன்றுவரை உறுத்திக் கொண்டிருக்கிறது.

அப்படி தமிழினம் என்ன தவறு செய்து விட்டது? தான் பிறந்து வளர்ந்த, தன் பூர்வீக மண்ணில் வாழ்வதற்கு உரிமை கேட்டது.

அந்த உரிமை மறுக்கப்பட்ட தன் விளைவு இன்று தன்மானத்தை இழந்து, தன் சொந்த பந்தங்களை இழந்து, தன் சொத்து சுகங்களை இழந்து, தன் அங்க அவையங்களை இழந்து அநாதையாய் நிற்கிறது. உலகில் எங்கும் நடந்திராத கொடுமை ஈழத்தில், முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தேறியது. தன் சொந்த நாட்டு மக்களையே கொன்றொழித்த கொடூரம் ஈழத்தைவிட வேறு எங்கும் நடந்ததாய்ச் சரித்திரமில்லை.

காசா மக்களை - இஸ்ரேல் படைகள் கொன்று குவித்தன. உக்ரைன் மக்களை ரஷ்யப் படைகள் துவம்சம் செய்தன. இவ்வாறு உதாரணங்கள் நூறு, ஆயிரம் என்று நீண்டு செல்லும் ஆனால் ஈழத்தில் தன் சொந்த நாட்டு மக்களையே அழித்து அவர்களுக்கு பயங்கரவாதப் பட்டம் சூட்டிய பெருமை எம் பெரும் பான்மை ஆட்சியாளர்களையே சாரும்.

போரின் உச்சம் ஈழத்தமிழினம் கொத்துக் கொத்தாய் மடிந்து கொண்டிருக்கும் வேளையில் போரை நிறுத்தக்கோரி இந்தியாவின் தமிழகத்தில் பல்வேறு அறவழிப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

இந்திய மத்திய அரசில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த சமயம் அது. இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியைக் கொன்றதற்கு பழிதீர்க்கக் காத்திருந்த சோனியா காந்தி போரை நிறுத்தி மக்களைக் காக்கத் தவறி, போருக்கு ஊக்கம் கொடுத்ததை ஈழத்தமிழினம் என்றும் மறவாது.

2009 ஏப்ரல் 27 அன்றைய தினத்தில் கலைஞர் கருணாநிதி ஈழத்தில் உடன் போரை நிறுத்தக் கோரி உண்ணாவிரதம் இருந்தார். வெறும் 7 மணிநேரத்தில் போரை நிறுத்துவதற்கு இலங்கை அரசு சம்மதித்து விட்டது என்று பெரும் பொய்யைக் கூறி தனது உண்ணா நோன்பை முடித்துக் கொண்டார். ஈழத்து உறவுகளின் நலனுக்காக அறவழிப் போரில் ஈடுபட்ட தமிழக தொப்பிள் கொடி உறவுகள் கலைஞரின் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து விட்டது. இனி ஈழத்தில் அநியாயமாகச் சாவுகள் நடக்காது என்று சந்தோசம் அடைந்தனர். ஆனால் அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை கலைஞரின் நாடகம் அதுவொன்றும் போர் நிறுத்தம் எதுவும் நடைபெறவில்லை என்பதும்.

கலைஞர் கருணாநிதியின் உண்ணாவிரதத்திற்குப் பின்னர் தான் போர் உச்சம் பெற்றது. ஈழத்தமிழர் மீதான இன அழிப்பு முழு மூச்சாய் நடந்தது.

போர் முடிவுற்றதாயும் பயங்கரவாதம் முழுவதுமாய் அழிக்கப்பட்டு விட்டதாயும் கொன்றொழிக்கப்பட்ட அப்பாவித் தமிழினத்தின் பிணக்குவியலில் ஏறி நின்று உலக அரங்கிற்கு உரையாற்றியது ராஜபக்ச அரசு. போர் நிறைவுற்று தமிழினம் மந்தை போல் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு மிகவும் மோசமாக நடத்தப்பட்டது.

போர் தந்த வடுக்களில் இருந்து மீளமுடியாமல் தவித்த அப்பாவிப் பொதுமக்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்து விசாரணை என்ற போர்வையில் மேற்கொண்ட கொடுமைகளின் தாக்கம் இன்றுவரை இருந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒரு இனம் தனது பலத்தை முழுவதுமாய் இழந்து இனி எம்மால் மீளமுடியாதா என்று, தன் எதிர்காலத்துக்காய் ஏங்கி நின்ற போது, இன்னொரு இனம் பாற்சோறு பொங்கி வெற்றி விழாக் கொண்டாடியதற்குள் இருக்கும் இன முரனை எவ்வாறு தீர்த்துவிட முடியும்?

போர் நிறைவின் பின் தழிழினத்தின் பூர்வீகங்களை கபளீகரம் செய்வதில் காட்டிய அக்கறையில் ஒரு துளியேனும் தமிழ் மக்கள் நலன்சார்ந்து சிந்திக்காதது பெரும் முரனே.

எங்கே தமிழினத்தின் தொன்மைகள் இருக்கிறதோ அங்கே பௌத்தத்தைத் திணிக்கும் செயல் தாராளமாக்கப்பட்டது. தமிழர் பூர்வீக நிலங்களை குறிவைத்து சிங்கள குடியேற்றங்கள் வேண்டியது போல நடத்தப்பட்டது. மனித இனத்திற்கு இருக்கும் மிகக் குறைந்த சுதந்திரமான, போரில் இறந்த தன் உறவுகளை நினைவுகூரும் சுதந்திரத்தைக்கூட தடுத்து நிறுத்தி, அதற்குள் பயங்கரவாதத்தை திணித்தது.

போரின் உச்ச நேரத்தில் தமிழினத்தின் உயிரைக் காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை எம் அடுத்த சந்ததிக்குக் கொடுத்து, தமிழினம் பட்ட வலியை அவர்களுக்கு உணர்த்தும் செயற்திட்டங்களை இரும்புத் திரை கொண்டு முடக்கியது. ஈழத்தின் அடுத்த சந்ததிக்கு எம் வீர வரலாறு தெரியக்கூடாது என்று எம் தேசமெங்கும் போதையை விதைத்தது. வாள் வெட்டை ஊக்குவித்தது, வன்முறையை ஆதரித்தது. அதன் விளைவு இன்று தமிழினம் தனது தொன்மையை இழந்து, தேசபக்தியை இழந்து மண்ணுக்காக உயிர் நீத்தவர்களின் தியாகங்களை மறந்து மரணித்த அப்பாவி உயிர்களின் வலிகளை மறந்து போதை என்ற மாயையில் மயங்கிக் கிடக்கின்றது.

இந்த நிலை மாற வேண்டும். மாற்றம் என்பது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்துதான் எழ வேண்டும் என்று கட்டாயம் இல்லை. பாதிப்புக்குள்ளாக்கியவர்களிடமிருந்தும் எழலாம் என்பதே முடிவு.

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

இன்று மே-18 முள்ளி வாய்க்கால் நிணைவேந்தல். எல்லோரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌனப் பிரார்த்தனை செய்து அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

**விதானையார்:-** நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் ஆரம்பிக்கப்பட்ட கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை மூடுவிழாக் கண்டுள்ளது.

என்ன செய்யிறது. நாவலர் பெருமான் இல்லையெண்டால், எங்கட ஈழ மண்ணில சைவமும் தமிழும் இல்லாமல் போயிருக்கும். ஆனாலும் அவர் ஆரம்பித்த கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை இப்போது மூடப்பட்டுள்ளது.

இப்ப அங்க நல்லூர்க் கோட்டம் இயங்குவதாக அறிந்தன்.

எனினும் பாடசாலை அரங்கில இருந்த நாவலர் பெருமானுடைய பெரிய உருவப்படம் அந்த இடத்தில இருந்து அகற்றி அருகில உள்ள ஓர் இடத்தில் போடப்பட்டுள்ளதாகக் கேள்வி.

**கங்காணி:-** ஏன் விதானையார். இறுதியாக இருந்த அதிபர் ஆறுமுகநாவலரின்ர உருவப்படத்தை இருந்த இடத்தில வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையோ.

**விதானையார்:-** கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில இறுதியாக இருந்த அதிபர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர்.

அந்தணர்களுக்கு ஆறுமுகநாவலரைப் பிடிக்காதல்லோ அதால நாவலரின்ர படம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை எண்டு பேசாமல் விட்டிருப்பினம்.




கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் உள்ள நாவலரின் உருவப்படம்

**வாத்தியார்:-** விதானையார் சொல்லுற கதையைக் கேட்க மிகவும் கவலையாக இருக்குது.

நாவலர்பெருமானை நாங்கள் போற்றத் தவறினால், அது தான் எங்கட இனத்திற்கான ஈனம்.

**சாத்திரியார்:-** தெரியாமல் தான் கேட்கிறன். நல்லை ஆதீன சுவாமிகளின்ர இறுதிச் சடங்கிற்கு ஒரு சில அந்தணச்சிவாச்சாரியர்களைத் தவிர, வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை எண்டு சுவாமிகளின்ர இறுதி நிகழ்வின்போது கதைத்தவியள். ஏன் அப்படிச் செய்தவியள்.

**விதானையார்:-** எண்டைக்கு நாங்கள் கோயிலின்ர கருவறை வரை போக முடியுதோ அண்டைக்குத்தான் எல்லாச் சமத்துவமும் கிடைக்கும்.

**சிறாப்பர்:-** விதானையார் சொன்னதை நானும் ஏற்றுக் கொள்கிறன்.

முன்பு ஆலயப் பிரவேசம் நடந்தது போல, இனி கருவறைப் பிரவேசம் நடக்க வேணும்.

சுத்த சைவமாக-ஆசாரமாக இருக்கிறவர்கள் கருவறைக்குள்ள தாராளமாகப் போகலாம். முன்பு தான் அந்தணச் சிவாச்சாரியர்கள் அறத் தன்மையோடு நடந்து கொண்டவியள்.

இப்ப அவர்களில சிலபேர் எப்படி நடந்து கொள்ளுகினம் என்பது தெரியும் தானே!.

ஆகையால ஆலய கருவறைப் பிரவேசத்தை உடனடியாக ஆலய அறங்காவலர் சபையினர் மேற்கொள்ள வேணும்.

**மூப்பர்:-** ஆறுமுக நாவலரின்ர உருவப்படம் பற்றிச் சொல்லவந்து இப்ப கருவறைப் பிரவேசத்துக்குள்ள நுழைஞ்சிருக்கிறம்.

**விதானையார்:-** மூப்பர் சொல்லத்தான் ஞாபகம் வருகுது.

ஆறுமுகநாவலரின்ர உருவப்படத்தை ஏலவே இருந்த இடத்தில வைக்கிறதுக்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேணும்.



## சைவவித்தியாசாலையில் இருந்து நாவலரை வெளியேற்றிப் போடாதீங்க

**பண்டிதர்:-** இப்ப நாவலருக்காகக் கதைக்கிறதுக்கும் ஆட்கள் இல்லைத்தானே.

**சிறாப்பர்:-** ஏன் பண்டிதர் ஐயா! அப்படிச் சொல்லுறியள்.

**பண்டிதர்:-** எங்கட யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் ஆறுமுக நாவலருக்கு விழா எடுக்கல்லத் தானே.

**விதானையார்:-** அவயள் இப்ப வத்திக் கானோட நிற்கினம்.

எங்கயும் நிற்கலாம். ஆனால் எதிலும் அறம் இருந்தால் சரி. இவ்வாறு பண்டிதர் கூற, ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** தமிழின அழிப்பில உயிரிழந்த தமிழ் மக்களுக்காக , கனடா நாட்டில அமைக்கப்பட்ட நினைவுத் தூபி தொடர்பில வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கைக்கான கனடிய நாட்டுத் தூதுவரை அழைத்து தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்.

**சாத்திரியார்:-** வாத்தியார் நீங்கள் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பான புகைப் படங்கள் வெளிவந்திருந்ததைப் பார்த்தன். அதில கனடியத் தூதுவர் மிகவும் பக்குவமாக இருக்கிறார்.

ஆனால் வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு கதைப்பதைப் பார்த்தன். ஜனாதிபதி அநுரவிடம் இருக்கிற பக்குவம் அமைச்சர் விஜிதவிட்ட இருப்பதாகத் தெரியவில்லை.

**மூப்பர்:-** இலங்கையில காலுக்கு மேல் கால் போட்டு இருந்த அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில செல்வாக்குப் பெற்றதான சரித்திரம் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இதற்கு நல்ல உதாரணம்.

ஆகையால எந்தப் பதவியில இருந்தாலும் முதலில பண்புடைமையோட நாம் நடந்து கொள்ள வேணும். அது தான் இங்க முக்கியம்.

இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



கனடாவில் நினைவுத்தூபி அமைத்ததற்கு அரசாங்கம் எதிர்ப்புத் தெரி வித்திருக்கிறதே?






செம்மணிப் புதைகுழி மீண்டும் உயிர்ப் பெறுமா வியாசரே?

**நோய், பசி இல்லாத உலகம் எப்படி இருக்கும் வியாசரே?**

*லட்சுமி-கொக்குவில்*

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்.

**கனடாவில் தமிழின நினைவுத்தூபி அமைத்தது தொடர்பில் தங்களின் கருத்து என்ன வியாசரே?**

*தமிழ்-யாழ்ப்பாணம்*

தமிழினத்திற்கு நடந்த இன்னல்களை இலங்கை அரசாங்கத்தை விட ஏனைய நாடுகள் நன்கு புரிந்து வைத்திருக்கின்றன.

அந்த நாடுகளில் மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றன. மனித உயிர்களின் பெறுமதி வேறு எதிலும் இல்லை என்று நம்புகின்றனர்.

ஆனால் அந்த நிலைதான் இங்கு இல்லையே. இங்கு தவறு செய்தவர் யார் என்ற கேள்வியிலேயே அவர் செய்தது தவறானதா? சரியானதா? என்ற தீர்மானம் எடுக்கப்படுகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிராக போரிட்டவர்களை எப்படிக் காட்டிக் கொடுப்போம் என்று கேட்பதற்குள் அவர்கள் தவறு செய்தாலும் தண்டனை இல்லை என்ற பதில் வந்து விட்டதல்லவா?

**செம்மணிப் புதைகுழி மீண்டும் உயிர் பெறுமா வியாசரே?**

*இந்து-மந்துவில்*

தமிழினத்திற்கு நடந்த கொடூரங்களின் மிக முக்கியமான சாட்சியாக இன்றுவரை இருப்பது செம்மணிப் புதைகுழி மாத்திரமே.

விசாரணைகள், ஆய்வுகள் மேற்கொள்ளும் வேகம் தவறிழைத்தவர்களுக்கான தண்டனை வழங்குவதிலும் இருந்தால் நன்று.

**வியாசரே போலியை எவ்வாறு இனங்காண்பது?**

*மது-கனகராஜன்குளம்*

வீட்டருகே ஒரு பழைய கட்டடம் இருந்தது. அதில் தேன் கூடு ஒன்று இருக்கிறது. அதில் தேன் எடுக்கப் போகிறோம். உங்கள் வீட்டின் ஜன்னல்களைப் பூட்டுங்கள் என்று சொல்லி வந்தான் ஒருவன்.

சரி என்று கூறியதும் உங்களுக்குத் தேன் வேணுமா? ஒருபோத்தல் 500 ரூபா என்றான். நான் வேண்டாம் என்றேன்.

மறுநாள் போலித்தேன் விற்றவரை பிடித்து வைத்திருக்கிறார்கள் என்றார்கள். போய்ப் பார்த்தால் வீட்டு ஜன்னல்களை மூடச் சொன்னவனே அவன்.

**நம்பிக்கையை ஒரு முறை உடைத்து விட்டால் அதை மீண்டும் எவ்வாறு கட்டியெழுப்புவது வியாசரே?**

*ஷாரா-கரணவாய்*

அது அவ்வளவு எளிதான விடயமல்ல. ஒருவர் மீது வைக்கும் நம்பிக்கை என்பது ஆத்மார்த்தமானது. அது தமக்கு விசுவாசமானவர் என்ற எண்ணப்பாங்குடையது.

அது சடுதியாக மாற்றமடையும் போது அவர் தொடர்பில் வைத்திருந்த படிமானங்கள் அத்தனையும் சுக்குநூறாகி விடும்.

சுக்குநூறாக்கப்பட்ட அந்தத் துகள்களை எடுத்து மீண்டும் ஒரு மாளிகையைக் கட்டி விடுவது மிகச் சுலபமான விடயமல்ல.

முடிந்தவரை எம்மை முழுவதுமாய் நம்புபவர்களின் மனம் கோணாது பார்த்துக் கொள்வது சாலச்சிறந்தது.


அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்


**தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவது சாத்தியமானதா வியாசரே?**

*குமார்-யாழ்ப்பாணம்*

ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயம். ஆனால் எமது தேசியக் கட்சிகள் தமது சுய நலத்திற்காக செயற்படாமல் மக்கள் பொது நலனுக்காக ஒன்றிணைந்தால் நூறு விகிதம் அதை தமிழ் மக்கள் ஆதரிப்பர்.

அதை விட்டு விட்டு அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் வென்று விடலாம் என்று நினைத்தால் மீண்டும் தூக்கியெறியப்படுவார்கள். இதுவே சர்வ நிச்சயம்

**யாழில் போதை மரணங்கள் சடுதியாக அதிகரித்துள்ளதே வியாசரே?**

*சாய்செல்வம்-பருத்தித்துறை*

2009 இற்குப் பின்னர் தமிழ் இளைஞர்களிடம் இனப்பற்று, மண்பற்று, போராட்ட சிந்தனை, தலைவன் பற்றிய உயரிய எண்ணம் என்பன இருக்கக்கூடாது என்று நினைத்தனர், போதையைத் திணித்தனர்.

அந்தத் திணிப்பு இன்று வேர் விட்டு விழுது பரப்பி நிற்கிறது.

ஒருவன் போதை பாவித்தால் இறப்பு நிச்சயம் என்று தெரிந்தும் அதைப் பயன்படுத்துகிறான் எனின் அவன் அதற்கு எவ்வளவுக்கு அடிமையாகியிருக்கிறான் என்பது புரியும்.

**வியாசரின் தத்துவம் கேட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டதே?**

*ரிதுஷ்-வதுரி*

எவ்வளவு கஷ்டப்பட்டாவது பணம் சம்பாதித்து விடுங்கள். அது உங்களைப் பார்த்து முகத்தைத் திரும்பிச் சென்றவர்களை மீண்டும் உங்களைப் பார்த்து சிரிக்கச் செய்து விடும்.

**கனடாவில் நினைவுத்தூபி அமைத்ததற்கு அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறதே?**

*சுதன்-குப்பிழான்*

ஆட்சியாளர்கள் தமிழினத்தின் மீது கொண்டுள்ள அக்கறை என்னவென்பது நன்றாகப் புரிகிறது.

வெளிநாட்டவர் தமிழினத்தின் வலி உணர்ந்து செயற்படுவதில் துளியளவேனும் இலங்கை ஆட்சியாளர்கள் காட்டுகின்றனரா?

தூபி அமைத்தது தொடர்பில் கனடப் பிரதானியை அழைத்துக் கண்டனம் வெளியிட்டிருக்கிறது அரசு.

என்னதான் பேச்சுப் பேசினாலும் சில நேரங்களில் சிலரின் உண்மை முகம் வெளிவந்து விடும். அதற்கு இதுவும் ஒரு உதாரணம். அவ்வளவு தான்.

**ஆலய தர்மகர்த்தா சபைகளில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம் அல்லவா?**

*மகேஸ்வரன்-வரணி*

கோட், கேஸ் என்று நீதிமன்றங்களுக்கு அலைய அவர்கள் தயார் என்றால் பதவி வழங்க நாங்களும் தயார்.

அநேக கோவில் நிர்வாகிகள் நீதிமன்றப் படி ஏறுவதிலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.



# உளக்கமுள்ள காக்கையார்



**உள**க்கமுள்ள காக்கையார்
காக்கையாரே காக்கையாரே வா வா
கறுப்பு நிறத்தில் பறந்து வா வா

இரையைக் கண்டு நீ வா வா
உன் இனத்தை அழைத்து வா வா
பருத்த மரத்தில் பறந்து வா வா
பணிய இறங்கிப் பறந்து வா வா
கிடைத்த உணவை எடுக்கவே
கீழே இறங்கி வா வா

அங்கும் இங்கும் திரும்பியே
தோட்டம் பார்ப்பாய் காக்கையே
யாரும் உன்னைப் பார்த்தாலே
ஓட்டம் விடுவாய் காக்கையே

சிறு துண்டுச் சுள்ளி எடுப்பாய்
அலகு சொண்டால் தும்பைச் சேர்ப்பாய்
அழகிய கூட்டைக் கட்டியே
முட்டை இட்டுக் காப்பாயே
வெயிலும் மழையும் பார்க்காயே
வேற்றுமைகள் பார்க்காயே
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, நமக்கு
தேடி வந்து சொல்வாய் காக்கையே.

ஆறுமுகம் சிவபாலன்,
இணுவில்.

# அன்பு வாசகர்களே!

## உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126




# போதை என்பதும் ஒரு பாதையா?



**போ**தை எனும் புற்றுநோயுடன்
வாதை மிகத் தரும் கெட்ட பேயுடன்
பாதை தெரியாமல் போகின்றார் இளைஞர்
கேள்வி முறைப்பாடு ஏதுமில்லை
வாள் வெட்டுக் கலாச்சாரமும்
இங்கு மிக வர விடுகின்றார்
அரசு என்கின்ற அதிகார பீடத்துக்கு
இது அருகதையான அலுவலே அல்ல
போர் முடிந்துபோன ஒரு நாடு
இன்று அதுவே
போதைப் பொருள்களின் காடு
துப்பாக்கிவேட்டு, வாள்வெட்டு
தார்பாக்கிய நிலையே தொடர்கதையா?
உதவிகள் எல்லாம் செய்தே
உயரங்களில் ஒளிர வைப்போம்
சிகரங்களிலும் ஏற்றிடுவோம் உம் சிறாரை
சொன்னாலும் சொன்னார்கள்
மூலை முடுக்குகள் சாலையோரங்களில்
மூளை மயக்கத்துடன் உலவுவர் கண்டு
சிகரங்கள் தொடுவார் தம் சிறாரென
சிந்தனை வானில் சிறகடித்திட்ட
உற்றாரும் பெற்றாருமின்று பார்த்தால்
துயரங்களில் தினமும் தோய்ந்து விட்டார்.

வாணியழகன்,
இமையாணன், உடுப்பிட்டி.

# விளை நிலம்



**மு**ற்றிய நெற்கதிர்கள்
பணிவோடு தலை குனிந்து
காட்சி தரும் விளை நிலம்
அது தான் வயல் நிலம்!

வெங்காயம் கத்தரி வெண்டியொடு
மரவள்ளி எனக் கண் குளிரக்
காட்சி தரும் விளை நிலம்
அது தான் மேட்டு நிலம்!

மானிடரை உய்விக்கும்
கல்வி, அறிவு, ஞானம்
அத்தனைக்கும் உரியதான விளை நிலம்
அது தான் கல்விச் சாலை என்னும்
விளை நிலம்!

நோயின்றி வாழ வைக்க
சுத்தம் சுகாதாரம் பேணுகின்ற
விளை நிலம் அது தான்
நம் தேக மென்னும் விளை நிலம்!

நல்லெண்ணம் நல்லொழுக்கம்
அன்பு, பாசம் கொண்டதோர்
விளை நிலம் - அது தான்
நம் உள்ளம் என்னும் விளை நிலம்!

இறை பக்தி அனுஷ்டானம்
இறை தொண்டு யாவும்
கொண்டதோர் விளை நிலம் - அது தான்
தொண்டர் தம் நல்லுள்ளம் என்னும்
விளை நிலம்!

**தவமணிதேவி கணேசலிங்கம்,
மூதாளர் அன்பு இல்லம்,
சிவபுர வளாகம், முகமாலை.**

# பொக்கிஷக் கவிதை

1987 வெளிவந்த
**"மல்லிகை கவிதைகள்"**
நூலிலிருந்து...

# ஒரு கிராமத்துக் காலைப் பொழுது



**எ**ன் கிராமத்தில் இருக்கும் என் வீட்டில்
பாயை விரித்துப் படுத்துக் கிடப்பேன்
காலைப்பொழுது மெல்லென மலர, அக்
காலையின் ஓசைகள் காதில் ஒலிக்கும்,
ஒற்றைக் காகம் தெருவாய்க் கரையும்,
ஒரிரு சேவல்கள் கூவிக் கேட்கும்,
குக்குறுப்பாய்ச்சான் குருவிகள் காலையில்
கத்திச் செல்லும், வீட்டுக்கு முன்னுள்ள
றோட்டால் மாடுகள் பூட்டிய வண்டியின்
மணியோசை வந்தென் மனதினை அப்பும்
"ரவுணி"லிருந்து நாளுக்கு நால்முறை
வரும் ஒரு பஸ்ஸின் ஓசை மட்டுமே
காலையில் கேட்கும் கார் ஒலியாகும்
நேரம் செல்ல மனிதர் சிலரின்
ஓசைகள் சில என் காதில் ஒலிக்கும்.
"ரவுணு"க்கு வேலைக்குச் செல்பவர்கள் நடக்கும்
காலடி ஓசைகள் காதினிற் கேட்கும்
அறைக்கு வெளியே அக்காளின் பிள்ளைகள்
போடும் சத்தமும், தேநீர் வைக்க
அம்மா கொள்ளி முறிக்கும் சத்தமும்,
ஆச்சி வெற்றிலை இடிக்கும் சத்தமும்,
அத்தனையும் சேர்ந்தொன்றா யொலிக்கும்
ஓசைகள் முற்றி உலுப்பிட அலுப்பால்,
சாரனால் உடம்பைப் போர்த்தி மூடி
வெளியே வருவேன்: தூங்கிக் கிடக்கும் என்
கிராமம் தெரியும் நீண்ட றோட்டில்
ஒரிரு மனிதரின் அசைவுகள் தோன்றும்
வீதியில் ஒரிரு மனிதர்கள் நிற்பர்
கைகளைக் குறுக்கே மார்மீது சாத்திக்
கூதலாற்றி, கொடுகுவர் சிலபேர் அங்கே
குப்பைகள் எரித்து நெருப்புக் காய்வர்.
கூந்தல் ஓலைகள் கொணர்ந்து
கொணர்ந்து குவித்து நெருப்பை வளர்ப்பர்
அவர்கள் கந்தையா அண்ணன் துறட்டிக்
கம்புடன் வேட்டியால் தலையை முக்காடிட்டுப்
பூக்கள் ஆயப் போய்க் கொண்டிருப்பார்.
உலகெலாம் வேகமாய் இலங்கையில் இவர்கள்
ஒன்றுமேயறியா திக் காலைப் பொழுதில்
மந்தமாய் இருப்பதை மனது நினைக்கும்
எந்தன் கிராமம் இந்த உலகுடன்
சரிசமமாகவே வேகமாய் இயங்கும்
நாள் வராதா என நான் எனுள் நினைப்பேன்.
விஞ்ஞான வளர்ச்சிகள் வெகு முன்னேற்றம்
என் கிராமத்தைத் துளைத்துக் கொண்டு
இங்கே வந்து இதனுடைச் சோம்பலைத்
தூக்கி எறிந்து தூளாக்காதா?
என்று நான் ஏங்குவேன்
எனது கிராமமோ
தூங்கியபடியே தோற்றமளிக்கும்.

சி.மௌனகுரு

# இந்தியா - பாகிஸ்தான் மோதல்...

# ஆயுத சோதனையில் வென்றது யார்?

ஜூனியர் விகடன்

ட்ரோன் என்றதும் நம் ஞாபகத்துக்கு வருவது, திருமண மண்டபங்களில் நம் தலைக்கு மேலே பறந்து படம்பிடிக்கும் தும்பி போன்ற ஒரு கருவிதான். ஆனால், ட்ரோன்கள் இன்று ஒரு போரின் வெற்றி, தோல்வியையே தீர்மானிக்கும் ஆயுதங்களாக மாறிவிட்டன. இந்தியா - பாகிஸ்தான் மோதலில் ட்ரோன்களின் பங்கு அதிகம். துல்லியத் தாக்குதல் நடத்தும் தற்கொலை ட்ரோன்கள் மூலம் தீவிரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்தது என்றால், துருக்கி நாட்டின் மலிவுவிலை ட்ரோன்களில் வெடிபொருள்களையும் எறிகுண்டுகளையும் அனுப்பி இந்தியாவைத் தாக்கியது பாகிஸ்தான். முப்படைகளைப் போலவே இனி ட்ரோன் படைகளையும் ஒவ்வொரு இராணுவமும் வைத்திருக்க வேண்டியது கட்டாயம் ஆகியிருக்கிறது. அந்த அளவுக்கு போரின் தன்மை மாறிவிட்டது.



ரஷ்யா - உக்ரைன் போருக்குப் பிறகு ட்ரோன்கள் அவசிய ஆயுதங்களாக உருவெடுத்துள்ளன. அந்தப் போரில் உக்ரைனுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அது உலகிலேயே முதல்முறையாக இரண்டு சாதனைகளைச் செய்திருக்கிறது. எறும்பு கடித்து யானை இறந்தது என்றால் நம்புவீர்களா? அப்படிப்பட்ட போர் மிராக்கிள்கள் இவை.

ரஷ்ய விமானப்படையில் அதிகம் இருப்பவை, Mi-8 ஹெலிகொப்டர்கள். கடந்த டிசம்பர் மாதம் இவற்றில் ஒரு ஹெலிகொப்டரை டிரோன் மூலம் தாக்கி வீழ்த்தியது உக்ரைன். உலகி லேயே முதல்முறையாக கடலிலிருந்து ஒரு பறக்கும் இலக்கை ட்ரோன் தாக்கி அழித்த சம்பவம் அதுதான். உக்ரைனிடம் Magura-V5 ட்ரோன் படகு இருக்கிறது. கருங்கடல் பகுதியில் வலம் வரும் டிரோன் போன்ற இந்தப் படகு, அதிலிருந்து ஏவுகணையைச் செலுத்தி ஹெலிகொப்டரை அழித்தது. எது தன்னைத் தாக்கியது என்பதை ரஷ்ய விமானி உணர்வதற்கு முன்பாகவே ஹெலிகொப்டர் நொறுங்கி விழுந்துவிட்டது. வெறும் 18 அடி நீளமுள்ள இந்த ட்ரோன் படகு, ஒரு ஹெலிகொப்டரையே காலி செய்யும் வல்லமை கொண்டதாக இருக்கிறது. இதைச் செலுத்துவதற்கு ஆள் தேவையில்லை. ரிமோட் மூலம் இதைச் செலுத்தலாம். ஏவுகணைகளை இயக்கி இலக்குகளைத் தாக்கலாம். உக்ரைன் தயாரிப்பான இதைப் பார்த்து ரஷ்யா மிரள்கிறது.

அடுத்த வெற்றியாக, கடந்த வாரம் ரஷ்யாவின் SU-30 போர் விமானம் ஒன்றையும் இந்த மகுரா ட்ரோன் சுட்டு வீழ்த்தியுள்ளது. இதைச் செய்தது Magura V7 என்ற ட்ரோன். அதிவேகமாகப் பறக்கும் போர் விமானத்தையே தாக்கி அழிக்க ஒரு ட்ரோன் போதும் என்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது.

ஒரு SU-30 விமானத்தின் விலை 5 கோடி அமெரிக்க டொலர். இதை வீழ்த்திய மகுரா ட்ரோன் விலை, வெறும் 2,65,000 டொலர் மட்டுமே!

பெரிய விமானம் தாங்கிக் கப்பல்களைத்தான் ஒரு தேசத்தின் இராணுவ வலிமையாக இதுவரை நினைத்திருக்கிறோம். கம்பீரமாக அது கடலில் செல்வது எதிரி தேசங்களை மிரளவைக்கும். ஆனால், காலம் மாறிவிட்டது. உலகிலேயே முதல்முறையாக சீனா ஒரு ட்ரோன் தாங்கிக் கப்பலை உருவாக்கியுள்ளது. 50,000 டன் எடையுள்ள இந்தக் கப்பலிலிருந்து அலை அலையாக தாக்குதல் ட்ரோன்களை ஏவிக்கொண்டே இருக்கலாம். துருக்கியும் ஈரானும் தங்கள் போர்க்கப்பலை ட்ரோன் கப்பலாக மாற்றிவிட்டன.

உக்ரைன் போரையும் சீனாவின் ட்ரோன் ஆர்வத்தையும் கவனித்து இந்தியாவும் தன் பாதுகாப்பு பார்முலாவை மாற்றியிருக்கிறது. இஸ்ரேல் தயாரிப்பான Harop ட்ரோன்களில் ஆர்வம் காட்டி, அவற்றில் 150 ட்ரோன்களை இந்தியா வாங்கியுள்ளது. முன்பு இஸ்ரேலில் தயாராகி வந்த இவை, இப்போது இந்தியாவிலேயே உருவாக்கப்படுகின்றன. 2-5 மீற்றர் நீளத்தில் ஒரு மினியேச்சர் போர் விமானம் போலவே இது இருக்கும். 'போர்க்களத்தின் கிங்' என அழைக்கப்படும் இந்த ட்ரோன்களைப் பயன்படுத்தியே அரபு நாடுகளில் பலரைப் போட்டுத் தள்ளியிருக்கிறது இஸ்ரேல்.

இந்த ட்ரோனில் ஏவுகணையும் இணைக்கப்பட்டிருக்கும். இதுமணிக்கு 417 கி.மீ வேகத்தில் பறக்கும் வல்லமை பெற்றது. இதன் முன்புறம் ஒரு கமரா இருக்கும். அதன் மூலம் இது தாக்க இருக்கும் இலக்கை கன்ட்ரோல் ரூமில் இருந்து கண்காணிக்கலாம். கடைசி நிமிடத்தில் திசையையும் மாற்றலாம். ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் இல்லாமலும் இயங்கக்கூடியது என்பதால், எந்த இடத்திலும் இதைப் பயன்படுத்தலாம். ஒரு ட்ரோனின் விலை இந்திய மதிப்பில் 5.73 கோடி ரூபாய். தாக்குதலுக்கு இதைப் பயன்படுத்தினால், தன் இலக்கை வெடிக்கச் செய்து ஏராளமான சேதாரத்தை ஏற்படுத்திவிட்டு, இதுவும் அழிந்துவிடும். அதனாலேயே இது 'தற்கொலை ட்ரோன்' என அழைக்கப்படுகிறது. இவை ரேடாரின் பார்வையில் சிக்காது என்பது கூடுதல் சிறப்பு.

'ஆப்ரேஷன் சிந்தூர்' நடவடிக்கையில் ரஃபேல் உள்ளிட்ட விமானங்கள் ஒரு பக்கம் ஸ்கால்ப் ஏவுகணைகளை வீசின என்றால், இன்னொரு பக்கம் தீவிரவாத முகாம்களைக் குறிவைத்துத் தாக்கி அழித்தவை இந்த ட்ரோன்கள்தான். இதேபோல லாகூரில் இருக்கும் பாகிஸ்தானின் வான் பாதுகாப்புக் கவசத்தை அழித்ததில் இதற்குப் பங்கு உண்டு.

பாகிஸ்தானும் பலவித ட்ரோன்களை வைத்திருக்கிறது. சீனத் தயாரிப்புகளான ட்ரோன்கள் அவர்கள் கைவசம் இருந்தாலும், தாக்குதலுக்கு அவர்கள் பயன்படுத்தியது மலிவுவிலை Songar ட்ரோன்களைத்தான். துருக்கி நாட்டின் தயாரிப்பான இவை 24,000 டொலர் விலையில் கிடைக்கின்றன.

இவற்றில் அதிகபட்சமாக 45 கிலோ வரை ஆயுதங்களை வைக்க முடியும். இந்த ட்ரோன்களில் தானியங்கித் துப்பாக்கிகளை வைத்துச் சுடலாம், வெடிகுண்டுகளை வைத்து வீசலாம். ரேடாரில் சிக்காமல் எல்லை தாண்டி வந்து இவை தாக்கும். இந்த ட்ரோன்களைத் தான் தினமும் இரவு நேரங்களில் 300, 400 என அலை அலையாக அனுப்பி இந்தியாவின் எல்லையில் 36 இடங்களைத் தாக்கியது பாகிஸ்தான். இவற்றைத் தாக்கி அழிப்பதற்கு, இவற்றை விட பல மடங்கு விலை கொண்ட ஏவுகணைகளை இந்தியா பயன்படுத்த வேண்டியிருந்தது.

ட்ரோன்கள் ஒரு பக்கம் தங்கள் வல்லமையை நிரூபித்தன என்றால், இந்தியாவின் வான் பாதுகாப்புக் கவசமும் தனது திறனை நிரூபித்துள்ளது. உலகிலேயே வலிமையான வான் பாதுகாப்புக் கவசம் இஸ்ரேல் வைத்திருப்பதுதான் என்று சொல்லப்படும் சூழலில், ரஷ்யத் தயாரிப்பான S-400 வான் பாதுகாப்புக் கவசத்தை இந்தியா வாங்கியது.

இதற்காக 35,000 கோடி ரூபாயைச் செலவிட்டது. ரஷ்யாவிலிருந்து இதை வாங்கக்கூடாது என்று அமெரிக்கா நிர்ப்பந்தம் செய்தது. ஆனால், அதைப் பொருட்படுத்தாமல் ஒப்பந்தத்தைத் தொடர்ந்தார் பிரதமர் மோடி. உக்ரைன் போருக்கு மத்தியிலும் இந்தியாவுக்கு இதை உருவாக்கி வழங்கியது ரஷ்ய நிறுவனம். இதுவரை மூன்று S-400 வான் கவச அமைப்புகள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்துள்ளன. இவை பாகிஸ்தான் மற்றும் சீன எல்லைகளில் நிறுவப்பட்டுள்ளன. விமானங்கள், ஏவுகணைகள் நம் எல்லைக்குள் வருவதை தனது ரேடார் மூலம் கண்டறிவது, அவை எந்த திசையில் எவ்வளவு வேகத்தில் வருகிறது என்று அறிவது, பிறகு எதிர்கொள்ளும் ஏவுகணைகளைச் செலுத்தி அவற்றை இடைமறித்து அழிப்பது என்று இந்த வான் கவச அமைப்புகள் பணி செய்யும். போர்க்காலங்களில் போர் விமானங்களும் இத்துடன் பணியில் இணையும். 10 கி.மீ முதல் 400 கி.மீ வரையிலான தூரங்களில் வரும் ஆபத்துகளை இவை கண்டறிந்து அழிக்கும்.

பாகிஸ்தான் முன்பு தன் ஆயுதத் தேவைக்குப் பெருமளவில் அமெரிக்காவை நம்பியிருந்தது. ஆனால், ஆப்கானிஸ்தான் போரில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களுக்குப் பிறகு பாகிஸ்தானைக் கிட்டத்தட்ட கைவிட்டிருக்கிறது அமெரிக்கா. அந்த இடத்தை இப்போது சீனா நிரப்பியிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் 900 கோடி அமெரிக்க டொலர் மதிப்புக்கான ஆயுதங்களை சீனாவிடமிருந்து பாகிஸ்தான் வாங்கியிருக்கிறது. பாகிஸ்தான் வைத்திருக்கும் வான் பாதுகாப்புக் கவசங்களும் சீனத் தயாரிப்புகளே! ஆனால் அவை பெரிதாக பாகிஸ்தானுக்குக் கைகொடுக்கவில்லை. அதேசமயத்தில் சீனா வழங்கிய J-10 C விகரஸ் டிராகன் விமானங்கள் அவர்களுக்குப் பெரும் பலமாக இருந்திருப்பது தெரிகிறது.

இராணுவ ஒத்திகைகளில் ஆயுதங்களின் திறன்கள் பரிசோதிக்கப்படுவது வழக்கம். அதைத் தாண்டி போர்க்களத்தில் அவை எப்படிச் செயற்படுகின்றன என்பது முக்கியம். ரஷ்யா-உக்ரைன் போர்க்களத்தில் மேற்கத்திய உலகின் ஆயுதங்களே பரிசோதிக்கப்பட்ட நிலையில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமான மோதல் வேறு பல உண்மைகளைத் தந்துள்ளது. நவீன ட்ரோன்களும் ரஷ்ய வான் பாதுகாப்புக் கவசமும் சீன விமானங்களும் இனி இராணுவ வட்டாரத்தில் அதிகம் அலசப்படும்.

# காலத்தால் அழியாத கானங்கள்

பாடகர் : டி. எம். சௌந்தரராஜன்
இசையமைப்பாளர் : எம். எஸ். விஸ்வநாதன்
படம்:ராஜபார்ட் ரங்கதுரை



அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்
தாய் என்றும் தந்தை என்றும் தன்னை நினைத்தான்
தாய் என்றும் தந்தை என்றும் தன்னை நினைத்தான்
அது உனக்காக வாழ்ந்த உள்ளம் அல்லவோ
அது உனக்காக வாழ்ந்த உள்ளம் அல்லவோ

அம்மம்மா தம்பி என்று நம்பி....

கையில் வைத்து காத்திருந்தால் காலடியில் காத்திருக்கும்
நன்றி மிக்க நாய்கள் உள்ள நாடு இது
இதை சொந்தமின்றி பந்தமின்றி
வந்த வழி நினைவுமின்றி
பிள்ளைகளும் பிறந்திருக்கும் வீடு

ராம நாடகத்தில் மூன்று தம்பிகளின் உள்ளம் கண்டேனே
நல்ல பாரதத்தில் நான்கு தம்பிகளை
நானும் கண்டேனே (2)

அது நாடகமா இது நாடகமா அது நாடகமா இது நாடகமா
இங்கு நான் காணும் வேஷங்கள்
கொஞ்சம் அல்லவே நான் இது போன்ற
வேஷத்தில் வந்ததில்லையே

அம்மம்மா தம்பி என்று நம்பி.....

தங்கை எனும் இளைய கன்று தாய் வீடு வந்ததென்று
என்னுடைய நாடகத்தில் காட்சி
அவள் கொண்டவனை பிரிந்து வந்து
கோலம் கொண்டு நிற்பதனை
கண்டதற்க்கு இன்னொருவன் சாட்சி
கண்ணில் நீர் பெருக சீதை நின்ற நிலை
கண்ணில் தெரிகிறது அண்ணன் கொண்ட துயர்
தம்பி லட்சுமணன் நெஞ்சில் எழுகிறது

அது பாசமன்றோ இது வேஷமன்றோ
அது பாசமன்றோ இது வேஷமன்றோ
அவன் ராஜாதி ராஜனுக்கு பிள்ளை அல்லவோ
இந்த ராஜபார்ட் ரங்கதுரை ஏழையால்லவா

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்
தாய் என்றும் தந்தை என்றும் தன்னை நினைத்தான்
அது உனக்காக வாழ்ந்த உள்ளம் அல்லவோ

அம்மம்மா தம்பி என்று நம்பி....

சி.மகாலட்சுமி.

# தேனீக்களின்
## அதிசய அரசாங்கம்!

**துப்புரவு தேனீக்கள்...**

இந்த வேலைக்காரத் தேனீக்கள் செய்யும் பணிக்கு ஏற்ப அதன் குழுவின் பெயர் அமைகிறது. முட்டையிலிருந்து வெளியே வரும் இளம் புழுக்களுக்கு உணவு கொடுத்துப் பராமரிக்கும் பணியைச் செய்யும் குழுவின் பெயர் 'செவிலியர்' தேனீக்கள். இளம் புழுக்கள், உணவு எடுத்த பிறகு, வெளியேற்றும் கழிவுகளைச் சுத்தப்படுத்தி, கூட்டைத் தூய்மைப் படுத்தும் பணியைச் செய்பவை 'துப்புரவு' தேனீக்கள்.

**இசட் பிரிவு பாதுகாப்பு...**

அடுத்து, 'காவலர்' தேனீக்கள் காலனியைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கவனித்துக் கொள்கின்றன. இந்தக் குழுவில் உள்ள தேனீக்களில் சில தேனீக்கள் கூட்டுக்கு வெளியே நிற்கும். சில தேனீக்கள் கூட்டைச் சுற்றிப் பறந்து கொண்டே இருக்கும். சில தேனீக்கள் கூட்டுக்கு உள் நுழையும் வழியில் நின்று காவல் காக்கும். இவைதான் தேன் கூட்டுக் கான 'இசட்' பிரிவு பாதுகாப்பு. இந்தக் காவல் படையைத் தாண்டி கூட்டுக்குள் வேறு எந்த உயிரினமும் நுழைய முடியாது.

**நடனமாடும் தேனீக்கள்...**

அடுத்து உள்ள ஒரு குழு மிகவும் முக்கியமான குழு. அதுதான் செய்தித் தொடர்புக் குழு. இந்தக் குழுவில் உள்ள தேனீக்கள்தான் கூட்டிலிருந்து வெளியே பறந்து சென்று எந்தத் திசையில், எந்த இடத்தில் அதிக மகரந்தம் உள்ள பூக்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து வந்து கூட்டுக்குள் செய்தி சொல்லும். பூ இருக்கும் இடத்தைக் கண்டறிந்து கூட்டுக்கு வந்த பிறகு, தான் கண்டறிந்த செய்தியை அதாவது, பூக்கள் இருக்கும் இடம் மற்றும் திசையை உடல் மொழியில் சில குறிப்பிட்ட வரைமுறைகளைப் பின்பற்றி நடனம் மூலமாகத் தெரிவிக்கும். இதற்குப் பெயர் வால் நடனம் அல்லது வட்ட வடிவ நடனம். தேனீக்களின் இந்த நடனத்தைக் கண்டுபிடித்ததற்காகவே ஒரு விஞ்ஞானி நோபல் பரிசு பெற்றுள்ளார்.

வால் நடனம் அல்லது வட்ட நடனம் மூலமாக எந்தத் திசையில் எத்தனை தூரம் செல்ல வேண்டும் என்பதைத் தேன் சேகரிக்கும் குழுவில் உள்ள தேனீக்கள் புரிந்து கொண்டு, அந்தத் திசையில் பறந்து செல்லும். பூக்கள் இருக்கும் இடங்களை வந்தடைந்த தேனீக்கள், பூக்களில் உள்ள இனிப்புத் திரவத்தை வாய் வழியாக உறியும். அந்த இனிப்புத் திரவத்தை எடுப்பதற்காகப் பூவுக்கு உள்ளே தேனீக்கள் நுழையும். இந்த இனிப்புத் திரவம் "நெக்டார்" எனப்படும். அப்படிப் போகும்போது பூவில் இருக்கும் மகரந்தம் தேனீக்களின் உடம்பில் ஒட்டிக் கொள்ளும். அந்த மகரந்தத்தூள் "போலன்" எனப்படும். (இந்த "நெக்டார்" மற்றும் போலன் இரண்டும் இணைந்து தேனின் வயிற்றுக்குள் நடக்கும் சில வேதியியல் மாற்றங்கள் மூலமாகத்தான் தேனாக மாறும்) உடம்பில் ஒட்டிக்கொள்ளும் மகரந்தத் தூளைப் பின்னங்கால் சப்பையில் உள்ள பையில் சேர்த்து வைத்துக் கொள்ளும்.

பூக்களில் தேன் எடுத்துக்கொண்டு வெளியே வரும் தேனீக்களின் பின்னங்கால் சப்பை, ஆட்டுக்கால் சப்பை போல பெரியதாக இருக்கும். அதன் மேல் மஞ்சள் நிறத்தூள் இருக்கும் பூக்களிலிருந்து இனிப்புத் திரவம் எடுக்கும் தேனீக்களுக்கு இரண்டு வயிறு இருக்கும். பின் பகுதியில் இருக்கும் வயிறு அதன் செரிமானப் பணிக்காகவும் முன்பகுதியில் உள்ள வயிறு பூக்களில் இனிப்புத் திரவம் சேகரிக்கவும் பயன்படும். முன் வயிறு நிறைந்தவுடன் சேகரிப்பு முடிந்து கூட்டுக்கு வந்துவிடும். பூக்களிலிருந்து இனிப்பு திரவத்தையும் மகரந்தத்தையும் எடுத்துக் கொண்டு வருவது மட்டும் தான் சேகரிப்பு குழுவின் பணி. அப்படிச் சேகரிப்பு முடிந்து கூட்டுக்கு வரும்போது அங்கே மற்றொரு குழு தயாராக இருக்கும். அந்தக் குழுவில் உள்ள தேனீக்களின் வாயில் தாங்கள் சேகரித்து வந்த இனிப்பு திரவத்தையும், காலில் உள்ள மகரந்தத்தையும் சேகரிப்புக் குழு தேனீக்கள் கொடுத்துவிடும்.

**வாயில் உருவாகும் தேன்...**

அதாவது இனிப்புத் திரவத்துடன் மகரந்தத்தையும் சேகரித்து வந்த தேனீக்கள் தனக்கு முன்னால் இருக்கும் தேனீயின் வாயில் எதுக்களித்துத் துப்பும் அதைப் பெற்றுக் கொண்ட தேனீ அதன் பின்னால் நிற்கும் தேனீயின் வாயில் துப்பும். இப்படி ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக மூன்று தேனீக்கள் வாயில் சென்ற பிறகு, அந்தத் திரவம் தேனாக மாறித் தேன் சேகரிப்பு அறையில் துப்பப்படும். இதைச் செய்பவை குழு தேன் நிரப்பும் குழு தேனீக்கள். தேனீக்கள் இனிப்புத் திரவம் மற்றும் மகரந்தத்தை சேகரிக்க பூக்களுக்குச் செல்லும்போது அவற்றின் உடலின் மீது மகரந்தத் தூள் ஒட்டிக்கொள்ளும் பின்பு அவை ஓர் பூவில் இருந்து மற்றொரு பூவுக்குச் செல்லும்போது அவை மீது ஒட்டிக்கொண்ட மகரந்தத் தூள் மற்ற பூக்களில் பரவி மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது.

**ராஜ உணவு...**

அந்த இனிப்புத் திரவத்தை வாங்கும் தேனீக்களின் ஒரு வயிற்றில் இனிப்பு திரவத்துடன் மகரந்தம் சேகரமாகும். அதுபோக தேனீக்களின் சிறப்புச் செல்கள் அந்த இனிப்புத் திரவத்தோடு கலந்து ராயல் ஜெல்லி உருவாகும் இந்த "ராயல்ஜெல்லி" ஒரு ராஜ உணவு.

(தொடரும்)



# “கசப்பாக இருப்பது தான்” பாகற்காயின் இயல்பு





ஆச்சிரமத்தில் ஒருநாள் சீடர்கள் குருவுக்கு முன்னால் மொத்தமாக வந்து நின்றார்கள். ஒரு சீடர் சொன்னார். குருவே நாங்கள் ஆன்மிக யாத்திரைக்குச் செல்லலாம் என்று இருக்கிறோம். தங்கள் அனுமதி வேண்டும்.

எதற்கு திடீரென்று பயணம்?

இதன் மூலம் மன அமைதிக்கு வழி கிடைக்கும் என நம்புகிறோம்.

நல்லது போய் வாருங்கள்! உத்தரவு கொடுத்த குருநாதர், ஒவ்வொரு சீடரையும் அழைத்தார். ஆளுக்கு ஒரு பாகற்காயைக் கொடுத்தார். நீங்கள் போகும் புண்ணிய தலங்களுக்கு இந்த பாகற்காயையும் எடுத்துச் செல்லுங்கள். பத்திரமாக இதையும் திரும்ப எடுத்து வாருங்கள் என்றார்.

சீடர்கள் கிளம்பிப் போனார்கள் எல்லாப் புனிதத் தலங்களுக்கும் குரு கொடுத்த பாகற்கயையும் கொண்டு போனார்கள். ஆசிரமத்துக்குத் திரும்பினார்கள். குரு கேட்டார் என்ன உங்கள் மன அமைதிக்கு வழி கிடைத்ததா? சீடர்கள் ஒருவரிடமும் அதற்குச் சரியான பதிலில்லை. அவர்களின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. குரு ஒரு சீடரை அழைத்தார். எல்லோரிடமுமிருந்த பாகற்காயையும் வாங்கச் சொன்னார். அவற்றை ஒன்றாகப் போட்டு, பொரியல் செய்யச் சொன்னார்.

உணவு நேரம் வந்தது. எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். குரு, பாகற்காய்ப் பொரியலை எடுத்து ஒருவாய் ருசித்தார். கோபத்தில் கத்தினார். இத்தனை புண்ணிய தலங்களுக்குப் போய்விட்டு வந்திருக்கிறீர்கள் அதன் பிறகும் இந்தப் பாகற்காய் கசக்கிறதே?

சீடர்கள் வாயடைத்துப் போனார்கள். ஒரு சீடர் தயங்கித் தயங்கிச் சொன்னார் கசப்பாக இருப்பதுதான் பாகற்காயின் இயல்பு. புண்ணிய தலங்களுக்குப் போவதால், அதன் இயல்பு எப்படி மாறும்?

சரியாகச் சொன்னாய். இந்தப் பாகற்காயைப் போலத்தான் மனிதர்களும். ஒரு மனிதன் தனக்குள் மாற்றத்தைக் கொண்டுவராமல், புனிதப் பயணம் செய்வதால் மட்டும் மாற்றம் ஏற்பட்டுவிடாது.

மன அமைதிக்கு நமக்குள்ளேயே வழி இருக்க, எதையோ தேடி, எங்கேயோ போவது வீண் என்பதைத்தான் அந்த குரு உணர்த்தினார். கடினமான இமயமலை, அமர்நாத் யாத்திரை போன்றவை இறையுணர்வை ஏற்படுத்துவதோடு இயற்கையின் முன் நாம் சிறு துரும்பு என உணரவைக்கும். நம் மனமும் எண்ணங்களும் தூய்மையாக இருந்தால், புனித யாத்திரை நிச்சயம் பலன் தரும்.

# ஆச்சி — அறிவுரை



## அன்னையர் தினத்தில் தாயன்பைத் தரணி போற்றச் செய்த தாய்!

○ மாவை.நா.கஜேந்திரன்

### பேராண்டி...

இந்த உலகத்திலே தாய் அன்புக்கு ஈடானது எதுவும் இல்லை. தெய்வம் எப்பிடி இருக்கும் எண்டு நீ கற்பனை செய்து பாக்கத் தேவையில்லை. அம்மா எப்படி இருப்பாளோ, அப்பிடித்தான் தெய்வம் இருக்கும்.

சிலர் தாய், தந்தையரை உதறி எறிஞ்சு போட்டு கோயில்களுக்கு கோடிகளிலை கோபுரம் கட்டிக் கொடுத்திட்டு, அதிலை உபயம் இன்னார் எண்டு எழுதி வைப்பினம். உண்மையிலை அப்பிடிப்பட்டவைக்கு அறிவு இல்லை எண்டுதான் சொல்லுவன்.

பேராண்டி! கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரும் துயரம் ஒண்டு நடந்திருக்கு. கேள்விப்பட்டிருப்பாய் தானே? ஓம், கண்டி – நுவரெலியா வீதியிலை கொத்மலை எண்டுற இடத்திலை ஒரு பெரிய பஸ் விபத்து நடந்திருக்கெல்லோ. அந்த, கொடூரமான விபத்திலை 24 பேர் இறந்திருக்கினம் எண்டுற செய்தியைக் கேட்க வயிறு பத்தியெரியுது.

இப்படி ஒரு விபத்து இதுவரைக்கும் நடந்ததில்லை. விபத்துக்குள்ளான பஸ்சிலை பயணிச்ச மூன்று பிள்ளைகளின்ர தாயும் தந்தையும் இறந்திருக்கினம். உறவினர் வீட்டுக்கு ஒன்பது மாதப் பிள்ளையோட பஸ்சிலை போகேக்கதான் இந்தக் கொடூர விபத்து நடந்திருக்குது.

300 அடி பள்ளத்திலை பஸ் விழுந்ததை யோசிச்சுப் பார்க்க நெஞ்சம் பதைக்குது. அந்தத் தாய்க்கு கடும் காயம் பஸ்சின்ர பாகங்கள் தாயின்ர இடுப்புப் பகுதியிலை பலமான காயத்தை ஏற்படுத்தியதோட அந்தத் தாயாலை அசையக்கூட முடியாத நிலை. ஆனாலும் பிள்ளையை தன்ர நெஞ்சோட அணைச்சு, பிள்ளைக்கு சிறு கீறல் காயம் கூட ஏற்படாமல் பாதுகாத்திட்டா. பொதுமக்கள் மீட்பிலை ஈடுபடும் போது அவா உயிரோட தான் இருந்தவா. “என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ. நான் செத்தாலும் பரவாயில்லை. என்ர பிள்ளையின்ர உயிருக்கு எதுவும் நடக்கக்கூடாது” எண்டு, தாய் கெஞ்சின வீடியோவப் பார்க்கக் கடவுள் ஏன் இப்பிடி அதுகளைச் சோதிக்கிறார் எண்டு மனது துடிச்சது. குழந்தையை பத்திரமா மீட்பாளர்களிட்டை கொடுத்த கணத்திலேயே தாய் உயிர் பிரிஞ்சது எண்டு நினைக்க, அடடா இதுவல்லவோ தாயின் தியாகம் எண்டு பெருமிதமடையச் செய்தது. இதுல இன்னும் கொடுமை என்னவெண்டா அன்னையர் தினத்திலை இது நடந்ததுதான்.

எங்கட சாரதிகள் கொஞ்சம் சிந்திச்சு சாரத்தியம் செய்யவேணும். நீங்கள் விடுற ஒரு சிறு தவறு எத்தின பேரின்ர வாழ்வை அழிக்குது. எத்தின பேரின்ர வாழ்க்கையை கேள்விக் குறியாக்கிப் போயிட்டுது எண்டு யோசிக்க வேணும். இப்படியான ஆபத்து இருக்கிற இடங்களிலை சாரத்தியம் செய்யிறவை மிகவும் அவதானமாகவெல்லோ இருக்கவேணும். கணப்பொழுது, ஒரு சிறு தவறு எத்தின பேரின்ர உயிரை எடுத்திட்டுது.

விபத்து சடுதியாக நடந்து முடிஞ்சிடும். ஆனால் அதின்ர வடு வாழ்க்கை முழுவதும் வதைச்சுப் போடும். எல்லாம் கடவுள் விட்ட வழி எண்டு பெருமூச்சு விடுகிறதை விட வேறு எதைச் செய்துவிட முடியும் பேராண்டி.

**ஆச்சி வருவா...**



# வாய்ப்புண்; காரணம், தீர்வு







வாய்ப்புண் என்பது பரவலாக எல்லோருக்கும் வரக்கூடியதுதான். சரியான சாப்பாடு சாப்பிடாதது, போதுமான அளவு தண்ணீர் குடிக்காதது, வாய் சுகாதாரம் பேணாதது, கூர்மையான பற்கள் இருப்பது போன்றவற்றால் அடிக்கடி வாய்ப்புண்கள் வரலாம்.

ஆனால், 3 வாரங்களுக்கும் மேல் வாய்ப்புண் இருந்தால், மருத்துவரை அணுகி, காரணம் அறிந்து சிகிச்சை எடுப்பதுதான் சரியானது. சத்துக் குறைபாடு, வெற்றிலை, பாக்கு பழக்கம், வாய் துர்நாற்றத்துக்காக எப்போதும் மிட்டாய் போன்ற ஒன்றை மெல்வது, அளவுக்கதிகமாக தேனீர், டீ குடிப்பது போன்றவற்றாலும் வாய்ப்புண் வரலாம்.

வாய்ப்புண் வருவதற்கான பரவலான காரணம், விற்றமின் பி-12 மற்றும் விற்றமின் -சி சத்துக் குறைபாடுதான்.

பற்தூரிகை பயன்பாட்டில் கவனம் வேண்டும். இரண்டு மாதங்களுக்கொரு முறை பற்தூரிகையை மாற்ற வேண்டும்.

நம்மில் பலரும் பாத்ரூமுக்குள்தான் பற்தூரிகையை வைப்போம். அது மிகவும் தவறானது. கழிவறையை ஃப்ளஷ் செய்யும் போது அங்குள்ள கிருமிகள் பற்தூரிகையில் வந்து உட்கார்ந்து கொள்ளும். பல் துலக்கும்போது ஈறுகள் புண்ணாகும்படி அழுத்தித் தேய்க்கக்கூடாது. இரவில் பல் துலக்க வேண்டியது மிக மிக முக்கியம்.

மணத்தக்காளிக் கீரை, வெந்தயக்கீரை, பசலைக்கீரை - இந்த மூன்றுமே வாய்ப்புண்ணுக்கு மிகவும் நல்லது. இவற்றை பாசிப் பருப்பு சேர்த்து மசியலாகச் செய்து சாதத்தில் நெய் விட்டுப் பிசைந்து சாப்பிடலாம்.

கேரட், பீட்ரூட், பீன்ஸ், முட்டைகோஸ், பீர்க்கங்காய், சுரைக்காய், வெள்ளரிக்காய், வெள்ளைப்பூசணிக்காய் போன்ற காய்கறிகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். மாதுளம் பழமும் வாய்ப்புண்ணுக்கு சிறந்த மருந்து. பகலில் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சிறிது எடுத்து வாயில் வைத்திருந்துவிட்டு துப்பி விடலாம். இரண்டு வருடங்களாக இந்தப் பிரச்சினை தொடர்ந்தால் தாமதிக்காமல் மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் பெறுவது தான் சரியானது.

# விரல்களும் பலன்களும்!









உங்களுடைய சுட்டுவிரல் நீளமாக, நடு விரலுக்கு இணையாக அமைந்திருந்தால், நீங்கள் பெரும் ஆளுமையுடன் இருப்பீர்கள். மற்றவர்களுக்குக் கட்டளையிடும் இடத்தில் இருப்பீர்கள். நடுவிரல் அகலமாக அமைந்தால் தீவிர சிந்தனையாளராகத் திகழ்வார். தத்துவ அறிஞர்களாகவும் விளங்குவார்கள். இவர்களின் சொல்லும் செயலும் சமூகத்தில் பல விளைவுகளை ஏற்படுத்தும்.

மோதிர விரல், சுட்டு விரலைவிட நீளமானால் கௌரவமும் செல்வமும் வந்து சேரும். வெற்றிகளைக் குறிக்கோளாகக் கொள்ளும் மனப்பாங்கு அமையும்.

சுண்டு விரலானது நன்கு வளர்ந்து நீளமாக அமைந்திருந்தால், மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் காந்த ச்க்தி உண்டு. சுண்டு விரல் மிகவும் நீளமாக மோதிர விரலுக்குச் சமமாக அமைந்திருந்தால், எழுத்து மற்றும் பேச்சுத்துறைகளில் சிறப்பு அடையச் செய்யும். எந்த ஒரு பொருளைப் பற்றியும் சரளமாக நீண்ட நேரம், கருத்துடன் உரையாட முடியும்.

கட்டை விரலே மனிதனை நன்கு அடையாளம் காட்டவல்லது. அந்த விரலின் உயரம், சுட்டு விரலின் அடிப்பாகத்தையும் தாண்டி அம்மைந்திருப்பது சிறப்பு. இத்தகைய கட்டை விரலைப் பெற்றவர்கள், சிந்தனைவாதிகளாகவும், சாதிப்பவர்களாகவும் திகழ்வர்.



## சமைப்போம் சுவைப்போம்



# அடை தோசை



## தேவையானவை :

1. பச்சரிசி
2. புழுங்கல் அரிசி – தலா 150 கிராம்
3. துவரம் பருப்பு மற்றும் கடலைப் பருப்பு சேர்த்து – 150 கிராம்
4. காய்ந்த மிளகாய் – 10
5. உப்பு – தேவைக்கேற்ப
6. வெங்காயம் – 1 கப் (பொடியாக நறுக்கி)
7. தேங்காய் – அரை கப்

தாளிக்க: கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, பெருங்காயம், எண்ணெய் (சிறிதளவு)

## செய்முறை

அரிசி, பருப்பை இரண்டு மணி நேரத்துக்கு ஊறவைத்து, கொர கொரப்பான பக்குவத்தில் அரைக்க வேண்டும். அதில் தாளித்த பொருட்கள், நறுக்கிய காய்கறிகள் மற்றும் உப்பு சேர்த்துக் கலக்க வேண்டும். அடுப்பில், தோசைக் கல்லை வைத்து, சின்னச் சின்ன அடைகளாகச் சுட வேண்டும். சுரைக்காய், முருங்கைக் கீரை, வாழைப்பூ போன்றவற்றையும் சேர்த்து செய்யலாம். புதிய சுவை கிடைக்கும். அவியலுடன் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

**பலன்கள் :**

- புரதம், நார்ச்சத்து, காபோவைதரேட், விற்றமின், தாது உப்புக்கள், நல்ல கொழுப்பு உள்ளிட்டவை சமச்சீராகக் கிடைக்கின்றன.
- கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து நிறைவாக உள்ளன.
- எலும்புகள் உறுதியாகும், நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

# ரோகித், கோலி ஓய்வை அறிவிக்க வைத்த கனவு!



இந்திய அணியை வெள்ளை உடையில் பிரதிநிதித்துவப்படுத்தியதில் பெருமைகொள்கிறேன் என்கிறார் ரோகித் சர்மா. என் டெஸ்ட் கரியரை எப்போதுமே ஒரு புன்னகையோடு திரும்பிப் பார்த்துக்கொள்வேன் என்கிறார் விராட் கோலி. இந்திய கிரிக்கெட்டின் இரு பெரும் நட்சத்திரங்கள் ஓய்வை நோக்கி நகர்ந்திருக்கின்றன. திரையரங்கில் அத்தனை பேரின் ஆர்வத்தையும் ஈர்த்து பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு திரைப்படத்தை சட்டென நிறுத்தித் திரைச்சீலைகளை இறக்கியதைப் போன்ற ஒரு குழப்பமே மேலோங்கியிருக்கிறது. ஆனால், இருவரின் ஓய்வுக்குப் பின்னாலும் நிறைய அழுத்தமான காரணங்களும் எதிர்காலக் கனவுகளும் அடங்கியுள்ளன என்பதை மறுக்கவே முடியாது.

ரோகித் சர்மாவிடம் இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன. முழுமையாக ஒரு கிரிக்கெட்டராக அவரை ஒருவிதமாக மதிப்பிடலாம். ஒரு டெஸ்ட் கிரிக்கெட்டராக அவரை வேறொரு விதத்தில் பார்க்கலாம். ரோகித் சர்மா டெஸ்ட் கிரிக்கெட்டில் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள நிறையவே நேரமெடுத்துக்கொண்டார். ஒரு கட்டத்தில் ரோகித் சர்மா யுவராஜைப் போல தெரிந்தார். அதாவது, வெள்ளைப் பந்து கிரிக்கெட்டின் ஹேங் ஓவரோடு டெஸ்ட் போட்டிகளில் ஆடி சொதப்புபவராகத்தான் இருந்தார். அவர் அதிலிருந்து மீள்வதே கடினம் என்று தோன்றியது. மீண்டு வந்தார். ஓப்பனிங்கில் தனக்கான இடத்தை நிலை நிறுத்திக்கொண்டார். இங்கிலாந்து சுற்றுப்பயணம் போன்ற கடினமான தொடர்களில்கூட நன்றாக ஆடினார். கூடவே கோலிக்குப் பிறகு இந்திய அணியின் கேப்டன்சியும் ரோகித்திடம் வந்து சேர்ந்தது.

என்ன பிரச்சினையெனில், டெஸ்ட் கிரிக்கெட்டில் ரோகித்தின் உச்சம் நீண்ட நெடியதாக இருக்கவில்லை. சீக்கிரமே அவரின் கிரா.ஃ.ப் சரியவும் தொடங்கியது. உள்ளூரில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஒயிட் வாஷ், பார்டர் கவாஸ்கர் தொடரில் தோல்வி என தொடர்ந்து இரண்டு பெரிய தொடர்களை அவரது கப்டன்சியின் கீழ் இந்தியா இழந்தது. தனிப்பட்ட முறையில் அவரின் பட்டிங் பார்முமே அடிவாங்கியது. பார்டர் கவாஸ்கர் தொடரின் கடைசிப் போட்டியில் கப்டனாக இருந்த போதும் தன்னைத் தானே ட்ராப் செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆக, ரோகித்தின் முடிவு எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஆனால், கோலி விடயத்தில் கதையே வேறு. கோலியால் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு டெஸ்ட் அணியில் ஆட முடியும். அதற்கான உடற்தகுதி அவரிடம் இருக்கிறது. பி.சி.சி.ஐயும் விராட் கோலியை வெளியேற்றும் மனநிலையில் இல்லை. ஆனாலும் விராட் கோலி தாமாகவே ஓய்வை அறிவித்திருக்கிறார். காரணம், கடந்த காலத்தில் பி.சி.சி.ஐக்கும் அவருக்கும் ஏற்பட்ட உரசல்கள்தான். 2021 காலகட்டத்தில் விராட் கோலியை வம்படியாக கப்டன் பதவியிலிருந்து நீக்கி பி.சி.சி.ஐ அவரை அவமதித்தது. கோலியிடம் தெரியப்படுத்தாமலேயே அவரை கப்டன் பதவியிலிருந்து நீக்கினார்கள். அப்படியொரு அவமதிப்பை மீண்டும் எதிர்கொள்ள கோலி விரும்பவில்லை. அதனால்தான் ஓய்வுபெறும் முடிவை எடுக்கும் உரிமை தன் கையில் இருக்கும்போதே ஒரு முடிவை எடுத்துவிட்டார்.

டெஸ்ட்டில் ரோகித்தின் சாதனைகள் தனிப்பட்டவை. ஆனால், கோலியின் சாதனைகள் அணிக்கானவை.

ஒரு காலகட்டத்தில் வெளிநாடுகளில் ஒரு போட்டியை வெல்வதே சாதனை என இந்திய அணி இருந்திருக்கிறது. அதை மாற்றியதும் கோலிதான். பார்டர் கவாஸ்கர் தொடரை அவுஸ்திரேலியாவில் இந்திய அணி தொடர்ந்து இரண்டு முறை வென்றது. லார்ட்ஸில் வைத்து இங்கிலாந்து அணியை அலறவிட்ட சம்பவத்தையெல்லாம் மறக்கவே முடியாது. வெறும் 60 ஓவர்கள், இரண்டு செஷன்களுக்கு இங்கிலாந்தின் பட்டர்கள் நின்று போட்டியை டிரா செய்ய வேண்டும். அந்த 60 ஓவர்களைத் தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து அணி மண்ணைக் கவ்வியது. கோலியின் காலத்துக்கு முன்பு வரைக்கும் இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர்களுக்கானதாக இருந்ததே இல்லை. கோலி அந்த நிலையை மாற்றினார். அடுத்தடுத்து வேகப்பந்து வீச்சாளர்களை அணிக்குள் கொண்டு வந்து கொண்டே இருந்தார். அதனால்தான் இந்திய அணியால் இங்கிலாந்திலும் அவுஸ்திரேலியாவிலும் போட்டிகளை வெல்ல முடிந்தது. தனிப்பட்ட முறையில் ஒரு வீரராகவும் சச்சினின் சாதனைகளை முறியடிக்கும் சாத்தியத்திலேயே தன்னை நிலைப்படுத்திக் கொண்டிருந்தார்.

ரோகித், கோலி இருவரும் இப்போது ஓய்வை அறிவித்திருப்பதில் அவர்களின் எதிர்காலக் கனவுகளும் அடங்கியிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. 2027 ஓ.டி.ஐ உலகக்கோப்பையை வெல்ல வேண்டும் என்பது இருவரினுடைய லட்சியம். அந்த இலக்கிற்கான வழியைச் செம்மைப்படுத்தும் விதமாகவும் இந்த ஓய்வு அறிவிப்பை எடுத்துக் கொள்ளலாம். இன்னும் கூர்மையாக அந்த உலகக்கோப்பையை நோக்கி இருவரும் பயணிக்கத் தொடங்கி விட்டார்கள்.

# தெளிவே என் சிந்தனையுள்... 10

ஒரு இளைஞன் காட்டு வழியில் தனியாய் பயணம் செய்து கொண்டிருந்தான். போகும் வழியில் ஒரு புதரினோரமாக ஒரு மண்டையோடு இருப்பதைக் கண்டான். அவனுக்கு பயம் ஏற்பட்டது. சடுதியாக அதைக் கடந்து செல்வோம் என நினைத்துக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான். அந்த மண்டையோடு பேசத் தொடங்கியது. மண்டையோடு பேசுவதைக் கண்ட இளைஞனுக்கு பயமும் வியப்பும் மேலோங்கியது. தயங்கியபடி மண்டையோட்டிடம் கேட்டான் "நீ எவ்வாறு இறந்தாய்" என்று. அதற்கு மண்டையோடு கூறியது, வாயை அடக்காததால்தான் என்று. இளைஞன் ஊருக்குள் சென்றான்.

இந்த விடயத்தை அரசனிடம் கூறினால் பரிசு கிடைக்கும் எனப் பேராசை கொண்டு அரண்மனைக்கு சென்று அரசனிடம் விடயத்தைக் கூறினான். அரசனோ "மண்டடையோடு எப்படிப் பேசும் என்று மறுத்தான். இளைஞன் விடுவதாய் இல்லை." "சரி ஒருவேளை மண்டையோடு கதைக்காமல் விட்டால் உன் தலையை வெட்டிவிடுவேன்" என்றான் அரசன். சம்மதித்த இளைஞன் அரசனையும் அழைத்துக் கொண்டு அவ்விடத்துக்கு சென்றான். மண்டையோட்டிடம் பேசும்படி கேட்டான். அது பேசவில்லை. கெஞ்சிப் பார்த்தான். பேசவில்லை. அழுது பார்த்தான். அது பேசவே இல்லை. அரசனின் வாளுக்கு அவன் தலை இரையானது. அனைவரும் சென்று விட்டனர். அப்போது அந்த மண்டையோடு அந்த இளைஞனின் தலையிடம் கேட்டது. ஆமாம், நீ எப்படி இறந்தாய் என்று, அதற்கு, "வாயை அடக்காததால்" என்றது இளைஞனின் தலை.

அன்பானவர்களே! எம்மில் பலரிடம் இருக்கும் பிரச்சினையும் இதுதான். இடம், பொருள், ஏவல் அறிந்து செயற்படுவதில்லை. இதன் விளைவு அந்த இளைஞனுக்கு நடந்த கதியை எதிர்நோக்கி விடுவார்கள்.

எப்போதும் எமது பேச்சு அடக்கத்துடன் இருக்க வேண்டும், அடக்கமில்லாமல், பின் விளைவுகளை யோசிக்காமல் நாம் பேசுவோமாக இருந்தால் அது எமக்கு மிகப் பெரிய தண்டனையைத் தந்து விடும். பேசவேண்டிய இடத்தில் பேசாதிருப்பதும், பேசக்கூடாத இடத்தில் பேசுவதும், இரண்டுமே தவறு. இதைப் புரிந்துகொண்டால் அனைத்தும் சரியாகி விடும்.



குருஜி



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

**55**

**செங்கை ஆழியான்**

22 மார்ச் 1987 இல் அதிகாலை அந்த முகாமை விடுதலைப் புலிகள் தாக்கினர். பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கடும் காயமடைந்த 13 பேரில் ஐவரை அங்கேயே விட்டு விட்டு எட்டுப் பேரைக் கைது செய்து அழைத்து வந்தனர். ஆயுதங்கள் புலிகளுக்குக் கிடைத்தன.

ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பூமாலை முடிந்திருந்த வேளையில் 1, ஜூன், 1987 அன்று அதிகாலை யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்த ஸ்ரீலங்கா மினி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் பயங்கரமான தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டனர்.

சக்தி வாய்ந்த குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று இந்த முகாமிற்குள் கொண்டு செல்லப் பட்டு வெடிக்கப்பட்டது. மூன்று இராணுவத்தினர் சரணடைந்னர்.

ஏனையோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். முருகதாஸ் என்ற போராளி இந்தச் சண்டையில் மரணமடைய நேரிட்டது. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிகழ்த்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் யாழ்ப்பாணச் சுற்றாடலில் 73 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். 464 பேர் சுடு காயங்களுள்ளாகினர் பொம்பர் குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் 86 பொது மக்கள் பலியாகினர்.

709 பேர் காயங்களுள்ளாகினர். பாதிப்புற்றோர் இவற்றிலும் கூடுதலாக இருக்கலாமே தவிரக் குறைய வாய்ப்பில்லை.

யாழ் கோட்டையிலிருந்து நிகழ்ந்த தாக்குதல்களினால் 600 வீடுகள் வரையில் சேதமுற்றன. எட்டு அரச கட்டடங்கள் முற்றாக அழிந்தன. 254 வர்த்தக நிலையங்களும் 6 ஆலயங்களும், 4 பாடசாலைகளும் சேதமுற்றன. சில முற்றாக அழிந்து போயின. இவற்றின் விளைவாக ஏறத்தாழ 692 மில்லியன் ரூபாய்கள் வரையில் சொத்துக்கள் அழிந்துள்ளன.

இந்த முற்றுகைக்காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 136 பேர் கொல்லப்பட்டதுடன், 11 பேர் கைதாகினர். போராளிகள் தரப்பில் உயிரிழப்புக் குறைவு. முற்றுகைக் காலத்திலும் மினி இராணுவ முகாம் தாக்குதல்களிலும் 7 பேர் வரையில் களப்பலியாகினர்.

இந்த நிலையில் 29. ஜூலை, 1987 இல் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தது 3, ஒகஸ்ட் அன்று விடுதலைப் புலிகளின் அனுமதியுடன் இந்திய அமைதிப் படை, யாழ்ப்பாணம் கோட்டைக்குள் பிரவேசித்தது.

இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டு வெளியேறும் வரை யாழ்ப்பாணக் கோட்டை அவர்களின் முகாமாக விளங்கியது.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




# கடற்புறா

போதும் உங்கள் ஊகம் நிறுத்துங்கள். இறைந்து கூவி விட்டு வெகு வேகமாகத் தளத்தின் பலகைகளில் ஓடிப் பக்க வாட்டு நூலேணியில் வெகு அவசரமாக இறங்கி துடியிடை துவள, உடலும் உணர்ச்சிகளும் குலுங்க கோட்டையை நோக்கிப் பறந்தாள் அந்தப் பைங்கிளி. மூச்சுத்தெறிக்க ஓடிய அவள் கோட்டை வாயிலில் யார் மீதோ திடீரென மோதிக் கொண்டாள். தலை நிமிர்ந்து நோக்கினாள்.

இளையபல்லவன் அவ்ளை இறுக்கிப் பிடித்திருந்தான். விடுங்கள் என்னை என்று திமிறினாள் அவள். அந்த இரும்புக்கரங்கள் அவளை அசையவிடவில்லை. எங்கு ஓடுகிறாய் மஞ்சளழகி?

"உங்கள் காதலியைக் கேளுங்கள்!" பதறாதே மஞ்சளழகி. யார் என் காதலி?" என்று கேட்டான் அவன். அதோ இருக்கிறாள்" என்று கடல் புறாவைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

மரக்கலமா? மரக்கலமல்ல. உங்கள் மனக்கலம் அது. அதில் வீற்றிருக்கிறாள் உங்கள் காதலி. அதுவே உங்கள் மணப்பெண். அதோ தெரிகிறதே கடல் புறா, கடல் கன்னி என்று ஒரு கையைத் திமிறி அவன் மார்பில் அடித்தாள் மஞ்சளழகி, அவளைப் பிடித்த பிடியை விடாமல் கடற் புறாவை நோக்கினான் இளைய பல்லவன். கடற் புறாவின் முகப்பு மூக்கை அப்பொழுதுதான் பொருத்தத் தொடங்கினான் கண்டியத் தேவன். அதன் அழகிய மூக்கு மஞ்சளழகியை நோக்கியது. மூக்குப் பலகைகளில் ஆணிகளை வைத்து தச்சர் இறுக்கினார். ஆணிகள் இறங்கிய சத்தம் மஞ்சளழகியின் காதில் பெரிதாக ஒலித்தது. அந்த ஆணிகள் தன் இதயத்தில் இறங்குவதாகவே அவள் நினைத்தாள். உணர்ச்சி மிகுதியால் மூர்ச்சை போட்டு இளையபல்லவன் மார்பில் சாய்ந்து விட்டாள். அவளைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு மாளிகையை நோக்கி நடந்தான் இளைய பல்லவன். அவனை வரவேற்க வாயிலில் காத்திருந்தான் பலவர்மன் முகத்தில் வெற்றிக் குறியுடன். அந்தக் குறிக்குக் காரணம் முதலில் விளங்கவில்லை இளைய பல்லவனுக்கு.

அன்று மாலை சேந்தன் சில விபரங்களை உளறிக் கொட்டிய போதுதான் இளையபல்லவன் காரணத்தைப் புரிந்துகொண்டான். புரிந்து கொண்டதும் அமீரை வரவழைத்து, "அமீர்! நமது நடவடிக்கைக்குச் சமயம் நெருங்கி விட்டது" என்று அறிவித்தான். அதை அறிவித்த இளையபல்லவன் குரல் வறண்டு கிடந்தது. வறட்சிக்குக் காரணம் புரிந்தது அமீருக்கு. அடுத்த நடவடிக்கை அக்ஷயமுனைக் கோட்டையின் கதியை நிர்ணயிக்கும் என்பதை உணர்ந்துகொண்ட அமீர், உத்தரவிடுங்கள் படைத் தலைவரே என்றான். உத்தரவுகள் மிகத்துரிதமாகவும் திட்டமாகவும் விளக்கமாகவும் வெளிவந்தன. "பயங்கரமான உத்தரவுகள்தான். ஆனால் வேறு வழியில்லை" என்று அமீர் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மயக்கமுற்ற மஞ்சளழகியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வந்த இளைய பல்லவனை மாளிகை வாயிலில் சந்தித்த பலவர்மன், "ஏன் தூக்கி வருகிறீர்கள் என் மகளை? இவளுக்கு என்ன நேர்ந்துவிட்டது?" என்று கவலையுடன் வினவிய சமயத்திலும் அவன் குரலில் மித மிஞ்சிய கவலைக்குப் பதில் ஓரளவு குதுகலமே ஊடுருவி நின்றதைக் கவனித்த இளையபல்லவன் அதைக் கவனித்தும் கவனிக்காதவன்போல், "கோட்டையின் உஷ்ணம், அதனால் மூர்ச்சையடைந்து விட்டாள்" என்று பதில் கூறினான்.

பலவர்மன் முகத்தில் கவலைக் குறியையே அதிகமாகக் காட்டி, "உங்கள் நாட்டைவிட இந்த நாட்டில் உஷ்ணம் அதிகம்" என்றான்.

"ஆம். ஆம். அப்படித்தான் தெரிகிறது" என்று பதில் சொன்ன இளையபல்லவன் மாளிகைக்குள் நுழைய முயன்றான். அவனுக்கு வழி விடாமலே நின்ற பலவர்மன் "இந்த அபரிமித உஷ்ணத்துக்குக் காரணம் தெரியுமா?"

(தொடரும்)

# முகம் 10



## விக்ரம்

**01.** வெளியூர்ப் படப்பிடிப்பில் கொஞ்சம் ஓய்வு கிடைத்தாலும் ரசிகர்களைக் குடும்பத்தோடு வரவழைத்து, படப்பிடிப்புக்கு இடையூறு இல்லாமல் மணிக்கணக்கில் பேசி மகிழ்வார். நம் விக்ரமா இது! என ரசிகர்களே உருகிப் போவார்கள்.

**02.** பள்ளிப் படிப்பு முழுவதும் ஏற்காடு மாண்ட் ஃபோர்டு ஸ்கூல். பள்ளிக் காலத்திலேயே ஆங்கில நாடகங்களில் பங்குபற்றிய அனுபவம் ஏராளம்! தமிழ் ஹீரோக்களை உருவாக்கும் லயோலாவில்தான் ஆங்கில இலக்கியம் படித்தார். தமிழ், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், கன்னடம் என ஐந்து மொழிகளில் சரளமாகப் பேசுவார். ஆங்கிலத்தில் நல்ல கவிதைகளும் எழுதுவார்.

**03.** எப்போதும் பிடித்தது பழைய சாதம், கருவாட்டுக் குழம்பு, ஆட்டுக்கால் பாயா. இதில் ஏதாவது ஒன்று இருந்தால்தான் அவருக்கு சாப்பாடே இறங்கும். மிகவும் குறைவாக, ஆனால், ருசித்துச் சாப்பிடுவார்.

**04.** விக்ரமின் இதர பெயர்கள் சீயான், கென்னி, ஜான் கென்னடி. இவரது பாஸ்போர்ட் பெயர் விக்ரம் கே.வினோத். செல்லப் பெயர் கென்னி. இந்தப் பெயர்களைச் சொல்லி அழைத்தால் ஒரு ஹாய், ஒரு கையசைப்பு, ஒரு புன்னகை இலவசம்!

**05.** மனித முகங்களைப் படம் பிடிப்பதில் "போட்டோகிராபர்" விக்ரமிற்கு அவ்வளவு ஆர்வம். நண்பர்களைப் புகைப்படம் எடுத்து அவர்களுக்குப் பெரிய அளவில் பிரிண்ட் போட்டுத் தந்து பரவசப்படுத்துவார். கண்காட்சி நடத்துகிற அளவுக்குக் கைவசம் புகைப்படங்கள் இருக்கின்றன. ஓவியம் வரைவதிலும் ஈடுபாடு உண்டு. விக்ரம் வீட்டை அலங்கரிக்கும் ஓவியங்கள் அவரது கைவண்ணம்தான்.

**06.** கார்களின் காதலன். ஆனால் இப்போதைக்கு அதிகம் பயன்படுத்துவது "ஆடி.ஆர் 8" ஸ்போர்ட்ஸ் கார். பார்ட்டி, டிஸ்கொதே, டிரிங்ஸ், சிகரெட் என எந்தப் பழக்கமும் இல்லாதவர். ஷூட்டிங் முடிந்தால் வீட்டில் செட்டில் ஆவதையே விரும்புவார்.

**07.** காதல் மனைவியின் பெயர் ஷைலஜா. இரு பிள்ளைகள். மகன் துருவ். மகள் அக்ஷிதா, கவின்கேர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மனு ரஞ்சித்தை மணந்திருக்கிறார். பேத்தி ஆர்யா! விக்ரம் வருடத்திற்கு ஒரு தடவையாவது குடும்பத்தை அயல் தேசம் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

**08.** மகன் துருவ்வின் படத்தேர்வுகளில் தலையிடுவதே கிடையாது. ஸ்கிரிப்ட் கேட்பது, நிறுவனம், டைரக்டரைத் தேர்வு செய்வது எல்லாமே துருவ்தான். நம்மை மாதிரியேதான் புதுப்படத்தின் இயக்குநர், ஸ்கிரிப்ட் பற்றியெல்லாம் துருவ்விடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்.

**09.** படிக்கிற காலத்தில் தீவிர கிரிக்கெட் ரசிகர். தற்போதும் டோனிதான் பிடித்த ஆட்டக்காரர். தினமும் ஜிம் செல்வதில் உறுதிகொண்டவர். "படப்பிடிப்புகளில் எனர்ஜியாக இருப்பதற்கு ஃபிட்னஸ் அவசியம்" என்பார். உடம்பை ஏற்றி இறக்கி மிரட்ட தயார் நிலையில் இருப்பார்.

**10.** கோலிவுட்டின் ஸ்டைல் ஐகான் இவர்! புரோமோஷன்களில் இவர் அணிந்து வரும் ஆடைகள் இன்டஸ்ட்ரி முழுக்க பேசுபொருளாகியிருக்கிறது.

பாலிவுட் நடிகர்களின் ஸ்டைலைத் தூக்கிச் சாப்பிடும் அளவிற்கு அவர் உடைகள் இருப்பதன் பின்னணியில் ஆடை வடிவமைப்பாளர்களுடன் இவர் உழைப்பும் கலந்திருக்கிறது.

# CINEMA சினிமா

சினிமா! சினிமா!

**"வடசென்னை - 2"** மறுபடியும் உயிர் பெறுகிறது. அதை வெற்றிமாறனே இயக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நேரம் இல்லையென வெற்றிமாறன் யோசித்து அதைத் தன் முக்கிய உதவியாளரை வைத்து டைரக்ட் செய்து மேற்பார்வை மட்டும் செய்யலாம் என நினைத்திருக்கிறார். ஆனால் அவர் இயக்கினால் மட்டுமே சிறப்பாக அமையும் என முதல் படத்தின் நடிகர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். "வாடிவாசல்" முடிந்த பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம் என்ற எண்ணத்திற்கு வந்துவிட்டார். வாங்க வெற்றி!



**இதுவரை** வாடகை அலுவலகத்தில் இருந்து வந்த இயக்குநர் மாரி செல்வராஜ், இப்போது சொந்த அலுவலகத்திற்குக் குடி வந்திருக்கிறார்.

தன் கவனத்தை ஈர்த்த எழுத்தாளர்களின் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களை பிரேம் செய்து பிரமாண்ட கலெக்ஷனாக சுவரில் அலங்கரித்துள்ளார். தவிர, அதன் அருகே அழகான லைப்ரரியும் அமைத்துள்ளார். களம் காத்திருக்கு காலமாடா!



**பூஜா ஹெக்டேவுக்கு** பாலிவுட்டில்தான் புத்தாண்டு பிறந்தது. அங்கே ஷாஹித் கபூருடன் நடித்த "தேவா" ஜனவரியில் வெளியானது.

அதன் பிறகு தமிழில் சூர்யாவுடன் "ரெட்ரோ" நல்ல தொடக்கமாக இருந்தது. அடுத்து விஜயுடன் "ஜனநாயகன்", ராகவா லாரன்ஸுடன் "காஞ்சனா 4" ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இடையே "கூலி"யிலும் ஒரு பாடலுக்கு ஆடியிருப்பதால், அதையும் ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கிறார் பூஜா. **பூஜாவா பூஜாவா!**





**பத்மபூஷண்** விருதை வாங்கிக்கொண்டு உடனே கார் ரேஸுக்காக வெளிநாடு செல்லும் ஏற்பாட்டில் தீவிரமாக இருக்கிறார் அஜித். திரும்பி வந்தபிறகு அடுத்த பட அறிவிப்பை வெளியிடலாம் என்ற முடிவில் இருப்பதாகப் பேசிக்கொள்கிறார்கள். சிவா, மகிழ், ஆதிக் என அனைவருமே பதற்றத்தில் இருக்கிறார்கள். God Bless U மாமே..!








# பாதுகாப்பான மதுபானம் எது?

மதுபானம் பாவிப்பது பாதுகாப்பானதா? மதுபான பாவனையை திடீரென்று நிறுத்திக் கொள்வது ஆபத்தானதா? சிறிதளவு மதுபாவனை உடலுக்கு நன்மை பயக்குமா? பாதுகாப்பான மதுபானம் எது? போன்ற பல தொடர்ச்சியான சர்ச்சைகள் எம் மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றன.

மதுபானம் பயத்தைப் போக்கி உற்சாகத்தைக் கொடுக்கிறது என்ற கருத்தும் கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு இது உடல் அலுப்பை போக்கி ஒரு வலி நிவாரணியாக தொழிற்படுகிறது என்ற அபிப்பிராயமும் பொதுவாக இருந்து வருகிறது.

அத்துடன் மனச்சஞ்சலத்திற்கு இது மருந்தாகிறது என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். எனவே இவை சம்பந்தமான தெளிவான உண்மைகளைத் தெரிந்து கொள்ள மதுபானம் சம்பந்தமாக நடத்தப்பட்டமருத்துவ ஆய்வுகள் உறுதுணையாக அமைகின்றன.

மதுபானப் பாவனையால் ஈரல், இரைப்பை, குடல், தொண்டை, களம், மூச்சுக் குழல் போன்ற பல்வேறு உடல் உறுப்புக்களில் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிப்பதுடன் அந்த உறுப்புக்களில் கடுமையான பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன என்பது ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் இளம் வயதினரிடையே காணப்படும் மதுபாவனை பழக்கத்தினால் மூளை விருத்தியில் சில நிரந்தரமான பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக மது பாவனையானது நிறை அதிகரிப்பு, ஆண்மைக்குறைவு, போசாக்குக் குறைவு, மனநல தாக்கங்கள் போன்றவற்றிற்கும் காரணமாக அமைகின்றது. இவ்வாறான பரந்துபட்ட சுகாதாரத் தாக்கங்களை கருத்திற் கொண்டு ஆய்வாளர்கள் சிறிதளவு மது அருந்துவதும் உடல் நலத்திற்குத் தீங்கானது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

பியர், வைன், கள்ளு போன்றவற்றில் மதுவின் செறிவுகுறைவாக இருந்தாலும் இவையும் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பவையே. எனவே பாதுகாப்பான மதுபானம் என்ற ஒன்று கிடையாது. சிகரெட், பீடி போல் மதுபானமும் ஒரு தீண்டத்தகாத பொருளாக சித்திரிக்கப்படுகிறது. இதனை எம் முன்னோர்கள் முன்னமே அறிந்திருந்ததால் தான் மது அருந்துவதை பஞ்சமாபாதகங்களில் ஒன்றாக வகைப்படுத்தி இருக்கிறார்கள்.

மதுபானம் அருந்திய நிலையில் ஒருவரின் திட்டமிடும் திறன், தீர்மானம் எடுக்கும் திறன் சாதுரியமாக நடந்துகொள்ளும் திறன் என்பன பெருமளவில் குறைந்துவிடும் என ஆய்வுகள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. சாதுரியமாக நடந்து கொள்ளும் திறன் அற்ற நிலையில் ஒருவர் பேசுவதைப் பார்த்து அவர் பயம் தெளிந்து உற்சாகமாக இருக்கிறார் எனக் கருதிவிட முடியாது.



கடுமையான வேலை செய்பவர்கள் தமது உடல் அலுப்பை போக்குவதற்கென்று மது அருந்துவார்களாயின் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் அது அவர்களின் உடலில் பல பாரதூரமான தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அத்துடன் காலப்போக்கில் அவர்கள் மதுவுக்கு அடிமையாவதுடன் பல சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே மதுவை ஒரு வலி நிவாரணியாகக் கருதி பாவிப்பது ஆபத்தான ஒரு நடைமுறையாகும்.

மனக்கவலையைப் போக்குவதற்கு என்று கூறி மது அருந்துபவர்கள் அந்தப் பழக்க வழக்கத்திற்கு அடிமையாகி பல மனத் தாக்கங்களுக்கு ஆட்படுகின்றனர். எனவே மனக்கவலைக்கு மது ஒரு மருந்து ஆகாது.

அத்துடன் மதுப்பழக்கமானது பல விவாகரத்துக்களுக்கும் வீதி விபத்துக்களுக்கும் தொழில் நிலையப்பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகின்றது.

மதுவை சிறிது சிறிதாக குறைத்து நிறுத்த முயல்பவர்கள் அதிலே வெற்றி பெறுவதில்லை. அதனைத் திடீரென்று நிறுத்திக் கொள்வதால் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படப் போவதில்லை. போதைக்கு அடிமையானவர்கள் அதனை முற்றாக நிறுத்த விருப்பம் இருந்தும் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பின் அல்லது அதனை நிறுத்தும் பொழுது சில வேண்டத்தகாத அறிகுறிகள் ஏற்படின் அரச வைத்தியசாலைகளின் உதவியை நாட முடியும். இவ்வாறானவர்களுக்கு உதவுவதற்கென்று வைத்தியசாலைகளில் தனியான பிரிவுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கொண்டாட்ட நிகழ்வுகளின் பொழுது மது பாவிக்கப்படுவது பல சமூக, சுகாதார,கலாசார, பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தி நிற்கின்றது. அத்துடன் புதிதாக பலரை மதுபாவனைக்கு தூண்டுவதாகவும் அமைந்து விடுகிறது. எனவே கொண்டாட்ட நிகழ்வுகளில் மதுபாவனை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. பெற்றோர்களின் மதுபாவனை பிள்ளைகளில் பல்வேறுபட்ட மனத்தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் அவர்களும் தீய வழிகளில் செல்வதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. மது பாவிக்கும் ஒருவர் இன்னொருவரை மது அருந்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் தார்மீக உரிமையை இழந்துவிடுகிறார்.

மதுவின் தாக்கங்களை தவிர்ப்பதற்கு அதன் பாவனையை முற்றாக நிறுத்த உறுதிபூணுவோம். எங்கள் நண்பர்களையும் மதுப் பழக்கத்திலிருந்து மீட்க முயலுவோம். யாராவது எம்மை மது பாவிக்குமாறு கேட்டுக்கொண்டால் அதனை முற்றாக நிராகரிப்போம். எம்மை மது பாவிக்கத்தூண்டியவரையும் அதன் பாவனையை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வோம். பொது நிகழ்வுகளில் மதுப்பாவனையை தவிர்த்து விடுவதில் பெருமை கொள்வோம். மதுவுக்குச் செலவிடும் பணத்தை சேமித்துப் பயனுள்ள காரியங்களுக்கு பயன்படுத்துவோம். போதையற்ற தேசம் நோக்கிப் பயணிப்போம்.

Dr.சி.சிவன்சுதன்.
(பொது வைத்திய நிபுணர்)

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

# வவுனியாவில் மினி சூறாவளி

# மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு







(வவுனியா)

வவுனியாவில் நேற்று வீசிய மினி சூறாவளிக்காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்றுக் காலை ஏழு மணியளவில் கடும் சூறாவளிக்காற்று வீசியதுடன், மழையும் பொழிந்தது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், மின்தடையும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியா நகரப் பகுதியில் இருந்த நடைபாதை விற்பனை நிலையங்கள் காற்றில் அடித்துச்செல்லப்பட்டுள்ளது.

நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளது. குறிப்பாக காற்றின் வேகம் அதிகரித்தமையினால் மின் வடங்களுக்கு மேல் மரங்கள் வீழ்ந்தமையால் சில பகுதிகளில் மின்சார தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. (8-250)

## முல்லை வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு



(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டார். இதன்போது மருத்துவமனையின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் தேவைப்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது நன்கொடையாளர் ஒருவரால் மருத்துவமனைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட சக்கர நாற்காலிகளை வழங்கும் நிகழ்விலும் பங்கேற்றார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை அத்தியட்சகர் ஆகியோர் பங்கேற்றனர். (8-299)

## முல்லையில் விருதுகள் வழங்கும் நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய விருதுகள் மற்றும் தொழிற்றுறை மேன்மை விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர். அ. உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் பி.ப 2.30 மணியளவில் நடைபெற்றது.

குறித்த இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம அதிதியாக கலந்துசிறப்பித்து விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் ஆறு தொழில் முனைவோருக்கு தொழிற்றுறை மேன்மை விருதுகளும், ஐந்து விவசாயிகளுக்கு விவசாய மேன்மை விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.



மேலும் மாவட்டத்தில் சிறப்பாக செயற்படும் விவசாயிகள் மற்றும் தொழில் துறையினர்கள் 73 பேரை கௌரவித்து ஊக்கப்படுத்தி சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆ.சிறி, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.ச.செந்தில்குமரன், வடக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. செ.வனஜா, வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் தலைவர் ந.உருத்திரமூர்த்தி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் (நிர்வாகம்), மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயகாந் (காணி), மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள், விவசாயிகள், தொழிற்றுறையினர் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (3-8)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள்



வற்றாப்பளை



தருமபுரம்



முட்கொம்பன்

(8-299-316-315)

# பாகிஸ்தான் விவகாரத்தில் 3 ஆம் தரப்புக்கு இடமில்லை

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டம்



**(டில்லி)**

**பாகிஸ்தான் விவகாரத்தில் 3 ஆம் தரப்புக்கு இடமில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக டில்லியில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது, பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலில் தொடர்புடையவர்களுக்கு ஆப்ரேஷன் சிந்தூர் மூலம் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

பாகிஸ்தான் விவகாரத்தை பொறுத்தவரை இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது.

இது இருதரப்பு விவகாரம். இதில் 3 ஆம் தரப்புக்கு இடமில்லை.

தீவிரவாதம் குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி ஏற்கெனவே தெளிவு படுத்தி உள்ளார்.

இந்தி யாவுக்கு எதிராக சதி வேலை களில் ஈடுபட்ட தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பதுங்கி உள்ளனர். அவர்களின் பட்டியலை பாகிஸ்தானிடம் வழங்கி உள்ளோம். அந்த தீவிர வாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும்.

பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத முகாம்களை மூட வேண்டும். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் வெளியேற வேண்டும்.

இதுகுறித்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம். இவ்வாறு அமைச்சர் ஜெய் சங்கர் தெரிவித்துள்ளார். (நி-8)

# நிபந்தனையுடனான பேச்சுவார்த்தைக்கு தயார் - பாகிஸ்தான் பிரதமர்



(இஸ்லாமாபாத்)

இந் தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகப் பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

26 பேர் உயிரிழந்த பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பின் இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்தது. கடந்த மே 10 ஆம் திகதி ஒப்பந்தம் மூலம் மோதல் முடிவுக்குக் கொண்டு வரப் பட்டது. இந் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இருப்பினும், இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு காஷ்மீர் பிரச்சினையும் ஒரு நிபந்தனையாக இருக்கும் என்பதை அவர் தெரிவித்தார். பஞ்சாப் மாகாணத்தில் உள்ள காம்ரா விமானப் படைத்தளத்தில் இராணுவ அதி காரிகள் மற்றும் வீரர்களுடன்உரையாடும் போது ஷெபாஸ் இந்தக் கருத் துக்களை தெரிவித்தார். ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அவற்றை ஒருபோதும் பிரிக்க முடியாது என்றும் இந்தியா ஏற்கனவே பல முறை தெளிவுபடுத் தியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 500 | 350 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 230 | 210 | 250 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 220 | 300 |
| தக்காளி | 800 | 800 | 1000 | 800 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 300 | 300 | 200 |
| கோவா | 450 | 550 | 600 | 350 | 600 |
| கரட் | 800 | 950 | 1100 | 900 | 1000 |
| பூசணி | 180 | 180 | 180 | 180 | 200 |
| புடோல் | 250 | 300 | 200 | 220 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 120-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 180 | 100 | 120 |
| பாகற்காய் | 800 | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 150 | 300 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 200 | 300 |
| பயற்றங்காய் | 300 | 250 | 600 | 250 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 250 | 600 |
| பீற்றூட் | 600 | 500 | 600 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 500 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 2500 | 2000 | 1200 | 1200 |
| போஞ்சி | 800 | 600 | 1000 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 450 | 350 | --- | 400 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 420 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 250 | 120-220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 1000 | --- | 700 |
| வெங்காயப்பூ | 800 | 800 | 600 | 700 | 800 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 140 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

# இத்தாலி பிரதமர் மெலோனியை முழங்காலிட்டு வரவேற்ற அல்பேனிய பிரதமர்



(அல்பேனியா)

அல்பேனியா நாட்டில் ஐரோப்பிய அரசியல் சமூக உச்சி மாநாடு நடை பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ள இத்தாலி பிரதமர் மெலோனி அல்பேனியா வந்தடைந்தார்.

அப்போது, இத்தாலி பிர தமர் மெலோனியை, அல் பேனிய பிரதமர் எடி ராமா முழங்காலிட்டு வணக்கம் தெரிவித்து வரவேற்றார்.

இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி பலரையும் கவர்ந்துள்ளது. (நி-8)

விதைத்துக் கொண்டே இரு;
முளைத்தால் மரம் இல்லையேல் உரம்.
– சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் இனிய உறவுகளே! நிம்மதியாக உறங்குங்கள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று. 2009ஆம் ஆண்டு மே 18 வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் உயிரிழந்த ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் நினைவேந்தல் நாள்.

சொந்த நாட்டில் ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் சேர்ந்து நடத்திய தமிழின அழிப்புப் போரில் இன்னுயிர் நீத்த எம் இனிய உறவுகளே! உங்கள் உறவுகளின் அழுகுரல் கேட்டு நீங்கள் மீளாத் துயில் கலைந்திருப்பீர்கள்.

விழித்தெழுந்த உங்களுக்கு சொல்லும் செய்தி எம்மிடம் ஏதுமில்லை.

சர்வதேசம் இன்னமும் எங்களை வஞ்சிக்கிறது. ஐ.நா சபை ஆண்டுக்கொரு முறை கூடி அநீதி செய்தவனுக்கே தானம் கொடுக்கிறது.

உள்நாட்டிலும் உய்வு இல்லை. உங்களுக்கான நீதி இன்னமும் எழுகை பெற மறுக்கிறது.

ஓ! நாங்கள் இலங்கைத் தமிழர்கள். ஆதலால் எங்களுக்கான வஞ்சிப்புகள் இப்போதும் இங்கு தாராளம்.

நீதி வழங்கப்படும் என்ற பொய் மொழிகள் ஒலித்து இன்றோடு 16 வருடங்கள் ஆகிவிட்டன.

இன்னமும் ஏதும் நடந்தாகவில்லை. தனித்து உங்கள் உறவுகளின் கண்ணீர் மட்டுமே இன்னமும் படைப்பலமாய் நின்று நிலைக்கிறது.

ஆம், எம் இனிய உறவுகளே! முள்ளிவாய்க்காலில் ஏற்றுகின்ற தீபங்களில் எல்லாமும் புனிதமானவையன்று.

உங்கள் உறவுகளும் உங்களை நேசிக்கும் தமிழ்ப் பற்றாளர்களும் ஏற்றி வைக்கின்ற தீபங்களே உங்களுக்கான அகல்விளக்குகள்.

மற்றும்படி உங்கள் இழப்புகளில் ஆதாயம் தேடுகின்ற ஒரு தரப்பினர் தீபம் ஏற்றும் நிகழ்வில் நிச்சயம் நிற்பர்.

ஆயினும் அவர்கள் நெக்குருகி நிற்பது போல் காட்டி ஏற்றுகின்ற தீபங்கள்; அடடா நம்மவர்களின் ஒற்றுமை எத்துணை உயர்வு என்று உங்களை நினைக்க வைக்கலாம்.

ஆம், அன்புக்குரிய உறவுகளே! எங்கள் தமிழ் அரசியலின் நிலையை இவ்விடத்தில் கூறி உங்களின் நிம்மதியை யாம் குலைக்க விரும்பவில்லை.

எனினும் இவர்கள் ஒற்றுமையாக – ஒன்றுபட்டு நிற்பதாக நினைத்து மீண்டும் நீங்கள் ஏமாந்து போவது எம் நெஞ்சுக்கு நீதியல்ல.

ஆகையால் ஓர் உண்மையைக் கூறித்தானாக வேண்டும்.

எங்கள் தமிழ் அரசியலில் ஒற்றுமை என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லாம் நடிப்பு. எல்லாம் நாடகம். உள்ளொன்றும் புறமொன்றுமான பேச்சுகள். இவைதான் எங்கள் தமிழ் அரசியலின் தற்கால நிலைமை.

உங்களை நினைந்தேனும் ஒற்றுமைப்படாத நம்மவர்களை என் செய்வது.

ஆகையால் அன்புக்கினிய உறவுகளே! நீங்கள் நிம்மதியாக உறங்குங்கள்.

## நாட்டு மக்களுக்குத் தேவையான உப்பைக் கூட அரசாங்கத்தால் வழங்க முடியாமல் போயுள்ளது

### அநுர அரசின் வினைத்திறனற்ற போக்கைச் சாடிய சஜித்

(கொழும்பு)

நாட்டு மக்களுக்குத் தேவையான உப்பைக் கூட இந்த அரசாங்கத்தால் வழங்க முடியாது போயுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர்,

நாட்டு மக்கள் தற்போது பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். வருமான மூலங்கள் மூடு கண்டு, சரியான வாழ்வாதாரம் கிடைக்காமையால் மக்களுக்கு கிடைக்கும் வருமானம் குறைந்து பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. அரிசி, பால்மா, தேங்காய் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

நாட்டில் தற்போது வினைத்திறனற்ற அரச நிர்வாகமே காணப்படுகின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் பேசுவதில் மிகவும் திறமையானவர்களாக இருந்தாலும் மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்களிடம் பதில்களோ? தீர்வுகளோ? இல்லை.

தற்போதைய அரசாங்கம் வாய்பேச்சு மூலம் மட்டுமல்லாது பொய்கள் மூலமும் மக்களை ஏமாற்றி வருகிறது.

உண்மை. நடைமுறை யதார்த்தம் மற்றும் அபிவிருத்தி மூலம் மக்களை அதிகாரப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும்.

உப்பைக் கூடச் சரியாக வழங்க முடியாத அரசாங்கத்தின் இந்த அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் அஞ்சாது எனத் தெரிவித்தார். (ம-7)

## வலி.வடக்கில் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்குக

### ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்கக்கோரி பொதுமக்களால் வடக்கு ஆளுநரிடம் மகஜர் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு வள நிலையம் எனும் பொது அமைப்பினூடாக வலிகாமம் வடக்கின் மயிலிட்டி, பலாலி, தையிட்டி உள்ளடங்கலாகக் காணப்படும் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்குமாறு கோரி பிரதேச மக்களால் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது.

நீண்ட காலமாக கடற்தொழில் மற்றும் விவசாயம் செய்வதற்கும் தமது இருப்பிற்குமான சொந்த நிலங்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை எனவும் படிப்படியாக விடுவிக்கப்பட்டுவரும் நிலையில் முழுமையாக இன்னமும் விடுவிக்கப்படாமையை ஆளுநரிடம் எடுத்துக் கூறியும் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டதாகக் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதில் வழங்கிய வடக்கு மாகாண ஆளுநர் தற்போதுள்ள ஜனாதிபதியின் காலத்தில் காணிகள் அனைத்தும் படிப்படியாக விடுவிக்கப்படும் எனக் குறிப்பிட்டதாகக் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ம-7)

## மன்னாரில் நேற்று கடுங்காற்றுடன் மழை

### மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(மன்னார்)

மன்னாரில் நேற்று சனிக்கிழமை (17) வீசிய பலத்த காற்று மற்றும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்றுக் காலை 6 மணியளவில் கடும் காற்று வீசியதுடன் கனமழையும் பெய்தது.

இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சில மணி நேரம் மின்தடை ஏற்பட்ட நிலையில் பின்னர் மின்சாரம் வழமைக்குத் திரும்பியது.

மேலும் பலத்த காற்று மற்றும் மழை காரணமாக மன்னார் பேசாலை கிராம மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

காலை கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அவசரமாக கரை திரும்பினர்.

மேலும் கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட டோலர் படகுகள் மற்றும் கண்ணாடி இழைப் படகுகள் காற்றில் சிக்கிய நிலையில் கரையில் ஒதுக்கப்பட்டது.

இதனால் படகுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை பலத்த காற்றுக் காரணமாக பேசாலை கடற்கரையில் காணப்பட்ட மீனவர்களின் மீன் வாடிகள் சேதமடைந்துள்ளது.

மேலும் மாவட்டத்தில் உள்ள ஏனைய மீனவக் கிராமங்களிலும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தாழ் நிலப்பகுதிகள் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.(ம-7,285)

## யாழில் பட்டப்பகலில் களவாடப்பட்ட ஆட்டோ

### மாலைக்குள் மீட்ட பொலிஸார்

(கரணவாய்)

யாழ்ப்பாணத்தில் நேற்று திருடப்பட்ட முச்சக்கர வண்டியானது நெல்லியடிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையின் காரணமாக சில மணிநேரங்களுக்குள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று சனிக்கிழமை மதியம் யாழ்ப்பாணத்தில் பச்சை நிற முச்சக்கர வண்டியொன்று களவாடப்பட்டுள்ளது.

இது குறித்து முறைப்பாடளிக்கப்பட்டிருந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய குறித்த வாகனம் களவாடப்பட்ட சில மணி நேரத்துக்குள் கரணவாய்ப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டதுடன் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,60)

### வாகன விபத்துக்களைத் தடுக்க

## வவுனியாவில் திடீர் வாகனப் பரிசீலனை

### வவுனியாப் பொலிஸார் அதிரடி

(வவுனியா)

வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் நேற்று மாலை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 10க்கு மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராகத் தண்டப்பத்திரம் வழங்கப்படடுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களையடுத்து வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ரனதுங்க தலைமையில் வவுனியா புகையிரத நிலைய வீதி , குருமன்காடு சந்தி ஆகிய பகுதிகளில் நேற்று திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது போக்குவரத்து சட்டங்களை மீறிச் செயற்பட்ட பத்துக்கு (10) மேற்பட்ட சாரதிகளுக்கு எதிராக தண்டப்பத்திரம் வழங்கப்பட்டதுடன் போக்குவரத்துச் சட்டங்களை முறையாகப் பின்பற்றுமாறும் இதனால் வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிர், உடமைச் சேதங்களைத் தவிர்க்கலாம் எனவும் சாரதிகளுக்கு வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது. (ம-7)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

75/100



**துலாம் இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 11.5.2025 அன்று 9 ஆம் இடத்திற்குப் பெயர்ச்சியாகி, ஒளிமயமான வாழ்விற்கு உத்தரவாதம் கொடுக்கப் போகின்றார். இதுவரை தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். வறட்சி நிலை மாறி வளர்ச்சி நிலை ஏற்படும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

நவக்கிரகங்களில் நன்மைகளை அதிகம் வழங்குபவர் குரு பகவான். அவர் உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் இப்பொழுது பாக்கிய ஸ்தானம் எனப்படும் 9ஆம் இடத்திற்கு வருகிறார். எனவே இதுவரை ஒத்துவராத உடன்பிறப்புகள் இப்பொழுது ஒத்துவருவர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். பணிபுரியும் இடத்தில் இருந்த பதற்ற நிலை மாறும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். தந்தைவழி உறவில் இருந்த விரிசல் அகலும், கூட்டுத்தொழில் செய்வோர் தனித்து இயங்க முற்படுவர்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றன. ஜென்ம ராசியில் குருவின் பார்வை பதிவதால் நன்மைகள் அதிகம் கிடைக்கும். நம்பிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக்கிரகமாக இருந்தாலும் "குரு பார்க்க கோடி நன்மை" என்பதற்கேற்ப பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அருளாளர்களின் ஆசியும், அனுபவஸ்தர்களின் அறிவுரையும் கை கொடுக்கும் நேரமிது.

குருவின் பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். பலமுறை முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும், வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம்பெறுகிறது. பிள்ளைகளின் முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் சூழல் உருவாகும். எதை எந்த நேரம் செய்ய நினைத்தாலும் செய்ய இயலும். அயல் நாட்டு அழைப்புகள் ஆதாயம் தருவதாக அமையும். பணிபுரியும் இடத்தில் சகப் பணியாளர்களின் ஒத்துழைப்பு திருப்தி தரும்.

## ஒன்பதில் வந்தது குருபகவான் பொன், பொருள் குவியும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6,2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது அற்புதமான நேரமாக அமையும் வருமானம் உயரும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர். உடல்நலம் சீராகும். வாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வரலாம். பூர்வீகச் சொத்துக்களில் உங்களுக்குரிய பங்கு கிடைக்கும். பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும்.

10.6.2025 முதல் 7.8,2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது மனக் கலக்கம் அகலும், மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். பூர்வீகச் சொத்துக்களைப் பாகப்பிரிவினை




செய்து கொள்வதில் இருந்த பிரச்சினை அகலும்.

08.08.2025 முதல் 25.05.2026 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும். நாடு மாற்றங்களும், வீடு மாற்றங்களும் உருவாகும். உத்தியோகத்தில் இருந்த இடையூறுகள் அகலும், பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். அரசு வழியில் வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நேரமிது.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

08.10.2025 அன்று குரு பகவான் கடக இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கொடுக்கல்- வாங்கல்கள் சரளமாக இருக்கும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். செய்தொழில் சிறப்பாக அமைவதோடு மட்டுமல்லாமல் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபமும் கிடைக்கும்.

வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புது முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பீர்கள். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு உறு துணையாக இருப்பர்.

**சனிப்பெயர்ச்சி**

06.03.2026 அன்று சனிபகவான் கும்பராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியால் ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்பதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. சகப் பணியாளர்கள் அயல்நாடு சென்று பணிபுரிகிறார்களே நமக்கு எப்பொழுது அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும். கடன் சுமை பாதிக்குமேல் குறையும். இடமாற்றங்கள் இனிமை தரும் விதம் அமையும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக அகலும், பொருளாதாரம் திருப்தி தரும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் திருமண முயற்சி கைகூடும். கடக குருவின் காலத்தில் பதவி மாற்றம் உண்டு

(தொடரும்)

## பறிகொடுத்த...

பயணமானது.

குறித்த ஊர்தியில் இறுதி யுத்தத்தின்போது மரணமடைந்த தன் மனைவி மற்றும் குழந்தையின் படத்தைப் பார்த்து தந்தை ஒருவர் கதறி அழுதார்.

இது அங்கிருந்தவர்களை மனம் நெகிழச் செய்தது. (ம-7)

## இளைஞனை..

முயன்ற 19 வயது யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வரணி வடக்கு கறுக்காய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி யுவதிக்கு திருமணம் நிச்சயதார்த்தம் 10 நாட்களுக்கு முன் இடம்பெற்ற நிலையில் குறித்த இளைஞன் யுவதி வீட்டில் தங்கி நின்றுள்ளார்.

பின்னர் தாயார் வீட்டிற்குச் சென்ற இளைஞர் யுவதி வீட்டிற்குத் திரும்ப வராததால் அவரை வரவழைக்க மேற்படி யுவதி இளைஞனுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (16) இரவு வீடியோ கோல் மூலம் தூக்கிடப் போவதாகக் கயிறு போட்டு அச்சுறுத்த முற்பட்டபோது தவறுதலாகக் கயிறு கழுத்தை இறுக்கிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.இளங்கீரன் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## முள்ளிவாய்க்..

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட சுற்றுலாப் பயணிகள் அதனை அருந்திச் சென்றனர்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழர்கள் வாழும் பகுதிகளில் உணர்வுபூர்வமாக இடம்பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பு கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது.

இதன்போது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பில் ஏற்பாட்டாளர்களிடமிருந்து கேட்டறிந்துகொண்ட அதே வேளை, கஞ்சியையும் பெற்று பருகிச் சென்றது அனைவரினதும் கவனத்தைப் பெற்றிருந்தது. (ம-7)

## போர்க் குற்ற..

வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் பரந்துபட்ட மனித உரிமை மீறல்களை அனுபவித்தவர்களை நினைவுகூருவதற்காக இலங்கையிலும் உலகம் எங்கிலும் உள்ள தமிழர்கள் ஒன்றுதிரள்கின்றனர்.

பாதிக்கப்பட்ட அனைத்துத் தமிழர்களையும் நினைவுகூருவதில் நான் உங்களுடன் இணைந்துகொள்கின்றேன். அந்த அநீதிகளின் கொடுமைகளின் பாதிப்புகள் நினைவுகளுடன் வாழும் உயிர் பிழைத்தவர்கள் அன்புக்குரியவர்களுடன் உடன்நிற்கின்றோம்.

சமூகங்கள் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வதற்கு கடந்தகால அட்டூழியங்களை ஏற்றுக்கொள்வதும் பொறுப்புக்கூறலும் அவசியம் என்பதை நான் அறிவேன்.

குற்றமிழைத்தவர்களை நீதியின் முன்நிறுத்தவேண்டும் என கடந்த வருடம் நான் எழுதியிருந்தேன்.

இதன் காரணமாக இம்முறை இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளிற்கு உள்ளான தனிநபர்களிற்கு எதிராக நாங்கள் சமீபத்தில் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதிக்க முடிந்தமை குறித்து திருப்தியடைகின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மழை..

பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பணிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான நிலையில் நேற்று முன்தினமான வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் அகழ்வின்போதே மனித எலும்புக் கூட்டுத்தொகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

முழுமையான என்புத்தொகுதி, மண்டையோடு என்பவற்றுக்கு மேலதிகமாக கை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அகழ்வு செய்யப்படும் பகுதியின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டதால், அந்த இடம் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கில்..

பர் மாதத்திற்கு அடுத்து அதிக மழை கிடைக்கும் மாதமாக மே மாதம் மாறி வருகின்றது. கடந்த 10 ஆண்டு களாக மே மாதத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கணிசமான அளவு மழை கிடைத்து வருகின்றது என்றார்.(ம-7)

## முள்ளி...

வாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

அத்தோடு முள்ளிவாய்க்கால் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்குத் தீபமேற்றி மலர் தூவி நினைவேந்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமாக இருந்த நேரத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பனர் பிரச்சினைக்குரியதென அவ்விடம் வந்த சம்பூர் பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் தெரிவித்து பதாகையை கழற்ற முற்பட்டபோது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டாளர்களுக்கும் குறித்த பொலிஸ் அதிகாரிக்குமிடையில் சிறிய வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பதாகை பொலிஸ் அதிகாரிகளினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன் பின்னரே சம்பூர் - கடற்கரைச்சேனையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மே 18...

தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று (18) காலை 6.30 மணி தொடக்கம் 09.30 மணிவரை முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரைப் பகுதியில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது உயிர் நீத்தவர்களுக்குரிய பிதிர்க்கடன் நிறைவேற்றும் கிரியைகள் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் காலை 10.15 மணிக்கு கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்படும்.

10.29 மணிக்கு நினைவொலி எழுப்பப்படும். 10.30க்கு அகவணக்கமும் அதனைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு சமநேரத்திலே ஒற்றைச் சுடரொளி ஏற்றப்பட்டு இறுதியிலே மலர் வணக்கம் செலுத்தப்படும்.

பொதுச் சுடரேற்றப்பட்ட தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் அனைவரையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.05.17 — சீட்டிழுப்பு இலக்கம் 5832 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 0 9 1 4 3 5 — அத சம்பத: C 1 4 3 5 — சீட்டிழுப்பு இலக்கம் 407 — National Lotteries Board

தன நிதானய — திகதி 2025.05.17 — சீட்டிழுப்பு இலக்கம் 1862 — M 17 18 59 74 M — Double Chance 49432

மெகா பவர் — திகதி 17/05/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2180 — Z 25 18 66 70 73

ஜய — திகதி 2025.05.17 — சீட்டிழுப்பு இலக்கம் 100 — Y 7 4 6 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4074 — சீட்டிழுப்பு திகதி 17.05.2025 — A 09 15 28 63 — A

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.05.17 — சீட்டிழுப்பு இலக்கம் 1141 — துலாம் 30 51 53 61 துலாம் — 64498 — 36

உத்தியோகபூர்வ முடிவுகள் — 17.05.2025 — வெற்றி வாரம் 540 — T 8 6 9 5 7 7 — 53412 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,380,284.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2806 — சீட்டிழுப்பு திகதி 2025.05.17 — தினம் சனிக்கிழமை — 27 60 67 77 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,355,480.80 — DLB

சனிதா — திகதி 17.05.2025 — வெற்றி வாரம் 4967 — 21 43 60 67 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,923,626.00 — 84059 — DLB

சசிரி — 684 — 17.05.2025 — சனிக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 38 43 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4518 — சீட்டிழுப்பு திகதி 17.05.2025 — தினம் சனிக்கிழமை — 01 13 25 27 — ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,240,226.80 — 217844 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — V 29 01 10 50 68 — 1987 — 17.05.2025 — சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2632 — சீட்டிழுப்பு திகதி 2025.05.17 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,018,788.80 — 05 15 16 23 F — 661710 — DLB

**Village Hotel**
**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக

www.villagehotel.lk (3992)

**077 544 8503**

## சொர்க்கம் திருமண சேவை கனடா

27 வயதுடைய பிரான்ஸ் விவாகரத்து பெண்ணுக்கு ஐரோப்பாவில் / கனடாவில் மணமகன் தேவை.
49 வயதுடைய அவுஸ்திரேலிய மணமகனுக்கு கனடாவில் மணமகள் தேவை.

**+1 416 666 1855**
**+94 77 200 0230** (1144)

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (1132)

## வேலைக்கு ஆட்கள் தேவை

பெண்கள் மட்டும் வேலை செய்யும் காலை உணவு தயாரிப்பு நிலையத்திற்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய பெண் உதவியாளர்கள் தேவை.
அனுபவம் தேவை இல்லை. (C-2977)

தொடர்புகளுக்கு : **077 625 6361**

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவில் சிறுவர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**071 535 4504**
**071 535 4500** (1137)

## Personal Class in Jaffna

**Science**
(English Medium)
Grade 6 to A/L
Medical Student

**075 445 0840** (C-2987)

## காணி விற்பனைக்கு

வடமராட்சி மந்திகை சிலையடிப் பகுதியில் பிரதான வீதியுடன் கூடிய 10 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பகுதிகளாகவும் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**077 500 2162** (1136)

## காணி விற்பனைக்கு

K.K.S Station க்கு அருகாமையில் 3 பரப்புக் காணியும் தெல்லிப்பழையில் 2 1/2 பரப்பும் 13 3/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
**077 691 3440** (4302)

## சேல்ஸ்மன் தேவை

நமது பிடவை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண்/ பெண் பணியாளர் தேவை.
நேரில் வரவும்.

**சென்னை பெசன் வேல்ட்**
**63, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C-2986)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

நிபந்தனைகளுடன்

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள் , எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237 (C-2994)

## தேவை

யாழ் நகர் எல்லைக்குள் அலுவலகம் நடாத்துவதற்கு இடம் தேவை. (1144)

தொடர்புகளுக்கு :
**077 2000 230**

## வேலையாட்கள் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை பார்ப்பதற்கு 50 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அல்லது தம்பதிகளாக வேலை ஆட்கள் தேவை. (C-2989)

தொடர்புகளுக்கு :
**075 894 3735**

## மணமகள் தேவை

வவுனியா 1991 இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சித்திரை நட்சத்திரம், அரச தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
வெளிநாடும் விரும்பத்தக்கது. (2990)

**077 728 1507**


## 26 ஆவது பிறந்த தினமும் 5 ஆம் ஆண்டு நினைவுப் பூக்களும்



**அமரர் லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)**
(யா/வயாவிளான் மத்திய கல்லூரி மாணவன் உயர்தரம் - 2018)

| தாயின் மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 18.05.1999 | 11.11.2020 |

பூமியின் கதவு உடைபட்டது - எங்கள்
மகன் ஏனோ விடை பெற்றான்
சந்தோசம் எம் வானில் தடைப்பட்டது
கண்மடல் நீர் நிரம்பி கலைபட்டது
அறம் எனும் சொல் மாறாது வாழ்ந்தீரே
பெற்றவர்கள் உடன் பிறந்தவர்கள், உறவினர்,
அயலவர் - என்பதை தாண்டி
உலகத்தால் மதிக்கப்பட்டாயே தம்பி கபிலா
தீங்கு என்பதை திணை அளவும் எண்ணாத உன்னை
காலன் தன் மடிக்கு அழைத்ததன் காரணம் தான் என்னவோ
தம்பி கபிலா நீ எம்மோடு இருந்த காலம் தான் குறைவு
ஆனால் உன்னைப் பற்றி மனதில் நினைக்காத நிமிடம் இல்லை
நரகத்தின் சிறையில் கூட சிதைந்து போவேன் தம்பி கபிலா
சிரித்த படி உன்னை நான் ரசிக்க
ஈர விழிகள் கூட இன்னும் காயவில்லை
கோரம் கொண்ட காலன் செய்த கோலமதால்
தம்பி கபிலா மீண்டும் வந்துவிடு
உன் வருகையை எண்ணி நாமும் காத்திருக்கின்றோம் - தம்பி கபிலா
தம்பி நட்ட மாமரமும் பூக்கவில்லையே
தம்பி வரட்டும் என்று சொல்லி காத்திருக்கின்றது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்
(C-2988)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 405/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 750ml NewVSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550~~/= |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70~~/= |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140~~/= |

400g Anchor 1040/= ~~1100~~/=



1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320~~/=



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1142)

Happy Supermarket
0777 8080 30

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ். அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க் கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்புகளுக்கு:
**076 755 8606**
**077 638 5683** (4308)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாரடைப்பு வரப்போவதைக் கண்டுபிடிக்கும் AI



நெஞ்சுவலி என்று மருத்துவமனைக்குப் போனால், மாரடைப்பு, இதயச் செயலிழப்பு போன்ற இதய நோய்கள் ஏதாவது இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள இ.சி.ஜி பரிசோதனை செய்யப்படுவது பலருக்கும் தெரிந்திருக்கும். இப்போது இந்தப் பரிசோதனையில் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, நம் இதயம் இளமையாக இருக்கிறதா அல்லது அது முதுமையின் தாக்கத்துக்கு உள்ளாகிவிட்டதா, இனிமேல் இதய நோய் ஏதாவது வருமா? என்பவற்றையெல்லாம் கணிப்பதற்கும் இ.சி.ஜி இனி உதவப்போகிறது.

மனித நோய்களை முன்னரே கணிப்பதற்கும், நோயாளிக்குச் சரியான சிகிச்சைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (AI) பல நவீன வடிவங்களைத் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறது. இந்த வரிசையில் இப்போது நம் இதயத்தின் இளமை ரகசியத்தைக் கண்டுபிடிக்கும் வழியை அது காட்டியிருக்கிறது.

இந்தப் புதுவிதப் பரிசோதனையைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால், இரண்டு அறிவியல் விடயங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒன்று, காலவரிசை வயது அடுத்தது, உயிரியல் வயது".

பொதுவாக, ஒருவரின் உயிரியல் வயதைத் தீர்மானிப்பதில் மரபணுப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. “எங்கள் தாத்தா 90 வயது வரை வாழ்ந்தார். என் அப்பா 80 வயதில் இறந்தார். ஆகவே, நானும் அந்த வயது வரை வாழ்வேன்” என்று நம்பிக்கையுடன் பலரும் சொல்வது இந்த மரபுப் பண்பின் அடிப்படையில்தான்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை காலவரிசை வயதுக்கும் உயிரியல் வயதுக்கும் அவ்வளவாக வித்தியாசம் இருந்ததில்லை. ஆனால், தற்போதைய புத்தியல்பு வாழ்க்கைமுறை நம்மிடம் வெகுவாக மாறிவருவதால், காலவரிசை வயதுக்கும் உயிரியல் வயதுக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதைக் காண முடிகிறது. உதாரணமாக, காலவரிசை வயது நாற்பதாக இருக்கிறவருக்கு உயிரியல் வயது ஐம்பதாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. அப்படியானால், அவர் பத்தாண்டுகள் முன்னதாகவே முதுமை அடைந்துவிட்டார் என்று அர்த்தம். பொதுவாக, உயிரியல் வயது குறைந்தால் இளமை நீடிக்கிறது என்றும், இந்த வயது கூடினால், சீக்கிரத்தில் முதுமை வந்துவிட்டது என்றும் பொருள்படும்.

மருத்துவத் துறையில் ஒருவரின் உயிரியல் வயதைக் கணிக்க இதுவரை ‘டி.என்.ஏ’ (DNA) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. டி.என்.ஏ மரபுச் சங்கிலியில் ‘மெதிலேஷன்’ என்னும் முறையில் வண்ணப்படுத்தியும், ‘டி.என்.ஏ’ முனையின் (Telomere) அளவை அளந்தும் இது மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஆகும் செலவு அதிகம் என்பதால், இது அதிக வரவேற்பைப் பெறவில்லை. மாறாக, பயனாளியின் சில இரத்தப் பரிசோதனை முடிவுகள், நோய்களை முன்கூட்டியே கணிக்க உதவுகிற சில வகை உயிரிக் குறிப்பான்கள் (Bio markers) ஆகிய வற்றை வைத்தும் உயிரியல் வயதைக் கணிப்பதுண்டு. ஆனால், இவையும் துல்லியமாக இல்லை. இவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் வந்துள்ளது ‘இ.சி.ஜி அல்காரிதம்’ (ECG Algorithm) என்னும் புதிய பரிசோதனை.

### பரிசோதனையில் ஒரு புதுமை!

நம் உயிருக்கு உத்தரவாதம் கொடுப்பது இதயத்தின் இயக்கம்தான். நாம் உண்மையிலேயே ஆரோக்கியமாகத்தான் இருக்கிறோமா என்பதை அறிவதற்கு மற்ற உறுப்புகளைவிட இதயத்தின் உயிரியல் வயதைத் தெரிந்துகொண்டாலே போதும். இந்த அடிப்படையை வைத்தே இந்தப் பரிசோதனையை உருவாக்கியுள்ளனர்.

பயனாளியின் இ.சி.ஜி பரிசோதனையைச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் ஆராய்ந்து அவருடைய இதயத்துக்கு உயிரியல் வயது என்ன, இனி எவ்வளவு காலம் இதயம் இயங்கும் என்பதை இப்பரிசோதனை தெரிவித்துவிடுகிறது. மேலும், அந்த நபருக்கு மாரடைப்பு, இதயச் செயலிழப்பு போன்றவை வருவதற்கு எந்த அளவுக்குச் சாத்தியம் இருக்கிறது என்பதையும் இது தெரிவிக்கிறது. இதன் பலனால், இதய நோய்கள் வரும் அபாயத்தை முன்கூட்டியே இனம் காண முடிகிறது.

தெற்குக் கொரியாவில் இன்ஹா பல்கலைக்கழக மருத்துவமனையின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த இந்தப் பரிசோதனைப்படி, காலவரிசை வயதைவிட இதயத்தின் உயிரியல் வயது 7 ஆண்டுகள் குறைவாக இருப்பவர்களுக்கு இதய நோய்கள் வரும் சாத்தியம் குறைவு என்றும், காலவரிசை வயதைவிட உயிரியல் வயது 7 ஆண்டுகள் அதிகமாக இருப்பவர்களுக்கு இதய நோய்கள் வரும் சாத்தியம் அதிகம் என்றும் தெரிய வந்துள்ளது.

இதய நோய்க்கு அதிக சாத்தியம் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துரைத்தும், தேவையான வாழ்க்கைமுறை மாற்றங்களைப் பரிந்துரைத்தும் அவர்களின் உயிரைக் காக்க முடியும் என்பது இந்தப் பரிசோதனையால் கிடைத்திருக்கிற மிகப் பெரிய நன்மை. இதை மேற்கொள்வது எளிது என்பதால் மருத்துவத் துறையில் அதிக வரவேற்பையும் எதிர்பார்ப்பையும் பெற்றுள்ளது. உலகில் ஆண்டுதோறும் 20 லட்சம் பேர் திடீர் மாரடைப்பால் அகால மரணமடையும் சூழலில், இந்தப் பரிசோதனை ‘பல லட்சம் உயிர்களைக் காக்க முடியும்’ என்னும் நம்பிக்கையை நமக்குள் விதைத்துள்ளது.






கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 775





கந்தமாறன் அடிக்கடி இவளிடம் தன்னைப் பற்றி பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறான். முன் தடவை இந்த மாளிகைக்கு வந்திருந்தபோது அவளை அரைகுறையாகப் பார்த்துச் சென்றதும், கந்தமாறன் அவ்ளை வேறு பெரிய இடத்தில் மணம் செய்து கொடுக்கப் போவதாகச் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தன. இந்தப் பேதைப் பெண் ஒரு வேளை அவளுடைய மனத்தை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறாளா, என்ன?

அதைப்பற்றி யோசிப்பதற்கு இப்போது நேரம் இல்லை வெளியேறும் வழியைப் பார்க்க வேண்டும். யானைத் தந்தப் பிடியுள்ள வழி அந்தப் புரத்துக்குள் போகிறது. ஆகையால் அது தனக்குப் பயன்படாது. தான் வந்த வழியைத்தான் தேடிப் பிடிக்க வேண்டும். இரகசிய வழிகளின் கதவுகளை உள்ளேயிருந்து திறப்பதற்கும் வெளியிலிருந்து திறப்பதற்கும் வெவ்வேறு முறைகள் உண்டு என்பது அவனுக்குத் தெரிந்ததே. திறப்பது எப்படி என்று கஷ்டப்பட்டுக் கண்டுபிடிக்கலாம்.

ஆனால் இரகசிய வழி எங்கே இருக்கிறது என்று தெரிந்தால் அல்லவா திறப்பதற்கு வழி கண்டுபிடிக்கலாம்? சுவரை எவ்வளவு உற்று உற்றுப் பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லை வெளிச்சமும் போதவில்லை. தான் புகுந்த இடத்துக்குப் பக்கத்தில் முதலை ஒன்று கிடந்தது என்பது அவன் நினைவுக்கு வந்தது. அங்கே போய் அருகிலுள்ள சுவர்ப் பகுதியையெல்லாம் தடவிப் பார்த்தால் ஒருவேளை வெளியேறும் வழி புலப்படலாம்.

இவ்வாறு நினைத்து முதலைக்கு அருகில் சென்று சுற்றுப் பக்கத்துச் சுவரையெல்லாம் தடவி தடவிப் பார்த்தான் ஒன்றும் பயன்படவில்லை. நேரமாக ஆகக் கவலை அதிகரித்து வந்தது. இது என்ன தொல்லை? நன்றாக இந்தச் சிறைச்சாலையில் அகப்பட்டுக் கொண்டோமே? கடவுளே! அந்தப்புரத்துக்குள் புகுவதைத் தவிர வேறு வழி இல்லை போலிருக்கிறதே! அப்படி அந்தப் புரத்துக்குள் புகுந்தால் அதில் எத்தனை அபாயங்கள்! ஒரு வேளை மணிமேகலை தன்னிடம் அனுதாபம் காட்டலாம். ஆயினும் தான் அவளிடம் இங்கே இப்படி இரகசியமாக வந்ததற்கு என்ன காரணம் சொல்வது? "உன்னிடம் கொண்ட காதலினால் வந்தேன்!" என்று சொல்லலாமா? அது எவ்வளவு கொடூரமான பொய்யாயிருக்கும்? துணிந்து அத்தகைய பொய் சொன்னாலும் அவள் நம்புவாளா? மணிமேகலை மட்டும் தனியாய் இருப்பாள் என்பது என்ன நிச்சயம்? மற்றப் பெண் பிள்ளைகளுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டால்? சம்புவரையர் அறிந்தால் கட்டாயம் தன்னைக் கொன்றே போடுவார்?

மறுபடியும் வந்தியத் தேவனுடைய கவனம் தரையில் கிடந்த முதலையின் மீது சென்றது. அதன் பேரில் அவனுக்குக் கோபமும் வந்தது. "முதலையே! எதற்காக இப்படி வாயைப் பிளந்து கொண்டே இருக்கிறாய்!" என்று சொல்லிக் கொண்டே அதை ஓங்கி ஒரு உதை உதைத்தான். உதைத்த போது முதலை கொஞ்சம் நகர்ந்தது. அதே சமயத்தில் சுவர் ஓரமாகத் தரையில் ஒரு சிறிய பிளவு தெரிந்தது!

"ஆகா! நீதானா வழியை அடைத்துக் கொண்டிருக்கிறாய்? முட்டாள் முதலையே! முன்னாலேயே சொல்வதற்கு என்ன?" என்று சொல்லிக் கொண்டே வந்தியத் தேவன் குனிந்து முதலையைப் பிடித்து நகர்த்தினான். முதலை நகர நகரச் சுவர் ஓரத்தில் துவாரம் பெரிதாகி வந்தது கீழே படிகளும் தெரிந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஞான பண்டிதர்



ஒரு கற்றறிந்த பண்டிதர். அவர் தமக்கு நிகர் யாருமில்லை என்ற கர்வ குணமுள்ளவர். படிப்பறிவில்லாதவர்களைக் கண்டால் அவருக்கு அறவே பிடிக்காது.

ஒரு நாள் அவர் ஒரு அகலமான ஆற்றைக் கடந்து அக்கரை செல்ல வேண்டியிருந்தது. பரிசலில் போவதைத் தவிர வேறு வழிகள் இல்லை.

பரிசல் ஓட்டுபவன் ஒரு பரம ஏழை. பார்ப்பதற்கு மிகச் சாதாரணமாயிருந்தான். அவன் படிப்பறிவில்லாதவன் என்பது. அவன் பேச்சிலேயே தெரிந்தது.

பண்டிதருக்கு அவனை விட்டால் வேறு வழி தெரியாததால் "அக்கரையில் உள்ள ஊரில் விட்டு விடப்பா" என்று சொல்லிப் பரிசலில் ஏறிக்கொண்டார்.

பரிசலும் ஆற்றுக்குள் செல்ல ஆரம்பித்தது. பரிசல் ஓட்டுபவன் மௌனமாக பரிசலை செலுத்திக் கொண்டிருந்தான்.

பண்டிதருக்குச் சும்மாயிருக்க முடியவில்லை. பரிசல்காரனைப் பார்த்து "நீ வேதம் படித்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

"அப்படின்னா என்ன சாமி?" என்று பரிசல்காரன் திருப்பிக் கேட்டான்.

"வேதம் படிக்காதவன் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?" என்று பண்டிதர் கிண்டலாகக் கேட்டார்.

பின்னரும் சும்மாயிருக்காமல் சரி உனக்கு கீதை தெரியுமா? என்றார்.

பரிசல்காரன் விழித்தான். "என்னப்பா உன் வாழ்க்கை? கீதை கூடப் படிக்காமல் நீ என்னத்தைச் சாதிக்கப் போகிறாய்" என்று மறுபடியும் பரிகசித்தார்.

இன்னும் கொஞ்சம் தூரம் பரிசல் ஆற்றில் சென்றது. உனக்கு "இராமாயணம், மஹாபாரதம் கதையாவது தெரியுமா?" என்று அவனை மறுபடியும் வம்புக்கு இழுத்தார்.

அவன் பொறுமையாக "சாமி, நமக்கு இந்தப் பரிசலை ஓட்டுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாதுங்க!" என்று பதில் சொன்னான்.

"இப்படிப் படிப்பறிவே இல்லாமல் இருக்கிறாயே. நீ வாழ்ந்து என்ன பயன்?" என்று அவனை இகழ்ந்தார்.

இதற்குள் பரிசல் ஆற்றின் நடுவே வந்துவிட்டிருந்தது. ஆற்றின் வேகத்தில் பரிசல் திடிரென தத்தளிக்க ஆரம்பித்தது.

பரிசல்காரன் பண்டிதரைப் பார்த்து "சாமி! உங்களுக்கு நீச்சல் தெரியுமா?" என்று கேட்டான்.

பண்டிதர் "தெரியாதே! ஏனப்பா?" என்று கேட்டார். பரிசல்காரன் ஏன் சாமி? இம்புட்டு படிச்சிருக்கிங்களே! உங்களுக்கு நீச்சல் தெரியலையே! இப்ப ஆற்றில வெள்ளம் வந்துருச்சே பரிசல் தாங்காது.

நீந்த முடியலை என்றால் வாழ்க்கைக்கே ஆபத்தாச்சே! என்று சொல்லிவிட்டு ஆற்றில் குதித்து நீந்திப் போய்விட்டான்.